
திக்குவல்லை கமால்
ஊருக்கு
நாலு பேர்

# ஊருக்கு நாலு பேர்

நாவல்

:.பரீதா பிரசுரம்

# அறுவடை

கவிதை : 1. எலிக்கூடு - 1973

சிறுகதை : 1. கோடையும் வரம்புகளை உடைக்கும் - 1984
2. குருட்டு வெளிச்சம் - 1993
3. விடுதலை - 1996
4. விடை பிழைத்த கணக்கு - 1996
5. புதிய பாதை - 1997
6. வரண்டு போன மேகங்கள் - 1999
7. நோன்புக் கஞ்சி - 2007

நாவல் : 1. ஒளி பரவுகிறது - 1995
2. நச்சுமரமும் நறுமலர்களும் - 1998
3. பாதை தெரியாத பயணம் - 2000
4. உதயக் கதிர்கள் - 2006

நாடகம் : 1. புகையில் கருகிய பூ - 2001
2. நிராசை - 2005

கட்டுரை : 1. மல்லிகை ஜீவா மனப்பதிவுகள் - 2004

சிறுவர் இலக்கியம் :
1. பிறந்தநாள் - 2003
2. உதயபுரம் - 2005
3. குளக்கரை வீரன் - 2007

# ஊருக்கு நாலு பேர்

## திக்குவல்லை கமால்

∴பரீதா பிரசுரம்

இந்நூல் கலாசார அலுவல்கள் அமைச்சினதும் மத்திய கலாசார நிதியத்தினதும் அனுசரணையில் அச்சிடப்பட்டுள்ளது. இதன் உள்ளடக்கம் கலாசார அலுவல்கள் அமைச்சின் அல்லது மத்திய கலாசார நிதியத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை என்பதை கவனத்திற் கொள்ளவும்.

ஊருக்கு நாலு பேர்
- நாவல் -

உரிமை
திக்குவல்லை கமால் - 2007

**ISBN - 978 - 955 - 95926 - 9 - 3**

முதற் பதிப்பு
செப்டெம்பர் - 2007

இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியல் தரவு

கமால், திக்குவல்லை.
ஊருக்கு நாலு பேர் / திக்குவல்லை கமால்
பண்டாரகம; நூலாசிரியர், 2007
ப.120; ச.மீ.21
**ISBN - 978 - 955 - 95926 - 9 - 3** விலை : 200.00
i 894.8113 DDC 21 ii தலைப்பு
1. நாவல்

● UOORUKKU NALU PER (NAVEL) ● COPY RIGHT - DIKWELLA KAMAL, 104. ATULUGAMA, BANDARAGAMA, SRI LANKA ● FIRST EDITION - OCTOBER - 2007 ● PAGES - IV + 112=118 ● COVER DESIGENE BY : MEMANKAVI ● TYPE SET BY : S.L.ROSEY ● PRINTED BY : AJ PRINT (PVT) LTD, DEHIWELA ● PUBLISHED BY : FAREEDHA PIRASURAM ● PRICE - RS. 200/-

# திறவுகோல்

உலகம் சகல துறைகளிலும் வேகவேகமாய் முன்னேறி வந்தாலும், ஊர்களென்னவோ ஒரு சில கருத்தோட்டங்களில் சிக்கி, சிக்கவிழ்த்துக்கொள்ள முடியாமல் முகம் சரிந்து போய்க் கிடக்கிறது.

இளம் சந்ததியினரின் துடிப்பான செயற்பாடுகளுக்கு எதிராக சமூக மேலாதிக்கம் எவ்வாறெல்லாம் எதிர்வினை காட்டுகின்ற தென்பதையும் துணிச்சல் மிக்க நான்கு பேர் முன்வந்துவிட்டால் எல்லாவற்றையும் முறியடித்து முன்னேறலாமென்பதையும் இந்நாவலில் சித்தரிக்க முயன்றுள்ளேன்.

இந்நூல் வெளிவரத் துணை நின்ற மத்திய கலாசார நிதியம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கும் நன்றியுடையேன்.

**திக்குவல்லை கமால்**

104 - அட்டுலுகம
பண்டாரகம.
இலங்கை

தொ.பே. : 0382292118
E-mail : Dikkamal@yahoo.com

# ஊருக்கு நாலு பேர்

# 1.

குளித்துவிட்டு வந்த மரீனா உடுப்புக்களை கொடியிலே உலரப் போட்டுக் கொண்டிருந்தாள்.

தலைமுடியிலிருந்து சொட்டுநீர் முதுகுப் பக்கமாக விழுந்து கொண்டிருந்தது. இரு கைகளையும் உயர்த்தி முடியை இரண்டு மூன்று தடவை தட்டிப் பரத்தி விட்டாள்.

காற்று சில்லென்று வீசி குளிர்ந்து போயிருந்த அவளது மேனியை இன்னும் இதமாக்கியது. வேலியையும் அடுத்த வீட்டு முற்றத்தையும் தாண்டி விரிந்த வயல்வெளியை அவளது கண்கள் ஊடுருவின. அக்கரை மண் ரோட்டில் மாட்டுவண்டியொன்று மெல்ல மெல்ல அசைந்து கொண்டிருந்தது.

வீட்டோடு முடங்கிக் கிடந்த மரீனா இப்பொழுது ஊரோடு சிறுகச் சிறுக ஒன்றிப் போய்க் கொண்டிருந்தாள். அவளை சமூர்த்தி மரீனா என்றால்தான் எல்லோருக்கும் தெரியும்.

இந்தக் கிராமம் இன்னும் எவ்வளவோ தேவைகளை எதிர் கொண்டு வளரத் துடித்துக் கொண்டிருப்பது அவளுக்கு நன்றாகவே புரிந்திருந்தது.

"மகேள் நான் கொறட்டுக்கு கொஞ்சம் பெய்த்திட்டு வாரன்."

மண்வெட்டியோடு வாப்பா புறப்பட்டு விட்டார். பின்பக்கமாக ஒரு நூறு மீற்றர் தொலைவில் அவர்களுக்கு கொஞ்சம் வயல் நிலமுண்டு. அது நீண்ட காலமாகவே விதைக்கப்படாமல் தூர்ந்து போய்க்கிடந்தது. வயலுக்கு அணித்தான சதுப்பு நிலப்பகுதியை வேலியடைத்து வாழை, மரவெள்ளி, காய் கறிகளென்று பயிரிட்டு வந்தார்.

அன்று ஒரு பெரிய கடமை அவளுக்காகக் காத்திருந்தது.

காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஃபைல்களோடு புறப்பட்டாள்.

ஒல்லியான அவளது உடலுக்கு இளநீல சல்வார் பளிச் சென்றிருந்தது. வெள்ளை சோல், மார்பு, முதுகென்று கடலலை யாய் விளையாடிக் கொண்டிருந்தது.

எத்தனை குடும்பத்தினர் சுயதொழிலிலே ஈடுபடுகிறார்கள்? என்னென்ன விதமான தொழில்கள் செய்கிறார்கள்? சந்தைப் படுத்தும் விதம் எப்படி? மாதாந்த வருமானம் எவ்வளவு? இப்படி பல்வேறு விதமான தகவல்களை உள்ளடக்கிய படிவங்களை வீடு வீடாகச் சென்று பதிவு செய்ய வேண்டி யிருந்தது.

"றம்ஸியா... றம்ஸியா..."

முற்றத்தில் நின்று தனது நண்பியை அழைத்தாள். உதவிக்கு அவளையும் இணைத்துச் செல்ல முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தாள்.

"உள்ளுக்கு வா மரீனா" சிரித்துக் கொண்டே அழைத்தாள்.

உள்ளே வானொலி பாடிக்கொண்டிருந்தது.

பாடலைக் கேட்பதும் பத்திரிகைத் தலைப்புக்களைப் படிப்பது மாக மரீனா அமர்ந்திருந்தாள்.

"ஆ மரீனவா... நானும் ஒங்களோட வாரன்" என்றவாறு இனாயாவும் வந்து புகுந்தாள்.

"எவளவு நல்லமண்" மரீனா மகிழ்ச்சி தெரிவித்தாள்.

"ஜாதி ஸல்வாறொன்டு உடுத்தீக்கி... எவளவன்?"

"ஓ இப்ப வரவர மொட்டாகிக் கொண்டு வார...?"

றம்ஸியா சொல்லி முடித்தாளோ இல்லையோ இனாயா அதை மெருகூட்டினாள்.

"இப்ப ஒம்பது மணியாகப் போற. நீங்களியள் வாரா இல்லாட்டி நான் பொகவா...?"

கடமை உணர்ச்சியோடு கேட்பது போல் விடயத்தை திசை திருப்பினாள்.

மூவரும் ஒன்றாக வெளியிறங்கினர். ஒரே வயது. ஒரே வகுப்பில் படித்தவர்கள். இளமைக் குதூகலம் கும்மாளமிடும் மனசு.

ஒன்று... இரண்டு... மூன்று என்று வீடுகள் நகர்ந்து கொண்டிருந்தன. அதிக நேரத்தை வீடுகளிலே செலவிட வேண்டிய தேவை ஏற்படவில்லை. சுயதொழில்கள் இருந்தால் தானே அதற்கு மேல் கேள்விகள் தொடரும்.

பெரும்பாலான குடும்பங்களில் ஒருவரின் உழைப்பிலே காலத்தை ஓட்டுகின்ற நிலைப்பாடே காணப்பட்டது.

"எங்களுக்கு தொழில் செய்தத்துக்கு வசதில்லேன்"

பொதுவாக பல இடங்களிலும் இப்படித்தான் சொன்னார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க மரீனாவுக்கு நேரம் இருக்கவில்லை.

"இப்ப கணக்கெடுக்கியாங்க. ஒதவி செய்வாங்களாயீக்கும்." சமாளித்துவிட்டு வந்து விடுவாள்.

தேநீர், இளநீர் என்று குடிப்பதற்கு குறைச்சலிருக்கவில்லை.

"எவளவோ ஒதவியள் எடுக்கேலும். எல்லாரும் ஒத்துமயா நின்டு கேக்கோணும். மத்த ஊரியள்ல எத்தின வேல நடக்கியன்."

"ஓ... எங்கடூரில ஒத்துமில்லேன். செய்தேமில்ல... செய்யுடுகியேமில்ல... ஒரு ஜாதி வெருவாக்கில கெட்ட ஆள்கள்."

"அப்பிடிச் செல்லிச் சரிவாரல்ல. நாளு பேரீந்தாப் போதும். நாங்க தொடங்கோம்."

"பொடியன்மாருக்கே உடுகியல்ல. பொம்புளயளுக்கு உடுகியா? கொஞ்சம் பேரீக்கேன்... ஊரு அவங்கட மாதிரி... அவங்களுக்கிட்டக் கேட்டுத்தான் எல்லம் செய்யோணும்."

பலவிதமான கருத்துக்கள் சங்கமமாகின. இன்னும் சிலரையும் சேர்த்து ஒரு ஆலோசனை நடாத்துவதென்று முடிவு செய்தார்கள்.

"செய்தத்த ஒழுங்காச் செய்யோம். ஒரு லிஸ்டப் போட்டு எல்லாருக்கும் காயிதம் குடுக்கோம்" றம்ஸியா தீர்க்கமான முடிவுக்கு வந்தாள்.

அடுத்த நாள் ஆலோசனைக் கூட்டத்துக்கு உரியவர்களைத் தேடி கடிதம் கொடுத்து விட்டார்கள்.

ஆரம்ப கட்டமல்லவா? ஆர்வம் வெகுவாக வெளிப்பட்டது.

# 2.

அன்றைய கூட்டத்திற்கான அழைப்பு நிஸாவுக்குக் கிடைத்திருந்தது.

"படிச்சு புள்ளயள மட்டுந்தான் கூப்பிடுகிய. கட்டாயம் வரோணும்." அழைப்பிதழோடு வந்த றம்ஸியாவும் மரீனாவும் வற்புறுத்திச் சொல்லி விட்டுப் போனார்கள்.

நிஸாவுக்கு நிறையவே மகிழ்ச்சி. படித்தவர்கள் பட்டியலில் அவளும் சேர்க்கப்பட்டிருப்பது குறித்துத்தான். அவள் அப்படி யென்ன படித்து விட்டாள்? சாடைமாடையாக ஏ.எல். பாஸ் பண்ணியிருந்தாள். அவ்வளவுதான்.

அந்தப் பரீட்சை எழுதியதோடு வீட்டுக்குள் முடங்கிப் போய் விட்டாள் அவள். கூடப் படித்தவர்களென்று சந்திப்பதற்குக் கூட சந்தர்ப்பமற்ற நிலை. பாடசாலைக் காலம் முற்றுப்

பெற்றாலும் இளமையின் குதூகலம் இன்னும் அற்றுப் போய் விடவில்லையே!

அழைப்புக் கிடைத்து இரண்டொரு நாட்களுக்குப் பிறகுதான் கிணற்றடியில் வைத்து ஸஹ்தியாவைக் காண நேர்ந்தது.

"என்னேம் கூப்பிட்டீக்கி. கட்டாயம் பொகோணும்டீ... ரெண்டு பேரும் போம்." அவள் உற்சாக மேலீட்டால் சொன்னாள்.

"ஏத்துக்கோ தெரியவே" தெளிவற்ற நிலையை வேறு பிரஸ்தாபித்தாள்.

"மரீன தாத்தாங்களாம் ரெடியாக்கிய. அவ செரியான கெட்டிக்காரியாம்டீ"

"அதுதானே எந்தநாளும் இப்படீக்கேலுமா பேப்பரியள பாக்கச் செல்லே மத்த மத்த ஊரியள்ல நடக்கிய ஜாதி வெளங்கிய தானே"

"சரி எதுக்கும் பெய்த்துப் பாக்கோமே" என்றவாறு குடத்தைத் தூக்கினாள் ஸஹ்தியா.

நிஸா அன்று வீட்டு வேலைகளை வெகு சுறுசுறுப்பாக செய்து முடித்தாள். தனது உடுப்புக்களை அயன் பிடித்துத் தயாராக வைத்தாள்.

"நான் சோறு திண்டிட்டு ஸ்கூலுக்குக்கிட்ட கொஞ்சம் பெய்த்திட்டு வாரனும்மா" என்று முன்கூட்டியே அனுமதி பெற்றுக்கொள்ள விழைந்தாள்.

"ஸ்கூலுக்கெட்டயா எனத்துக்கன்?" என்று கேள்வி எழுப்பிய படி காம்பராவுக்குள்ளிருந்து அவளது வாப்பா தலையை நீட்டினார்.

இனி காரியம் கொஞ்சம் கஷ்டந்தான். ஹம்தூன் நானா அடி முதல் நுனி வரை எல்லாம் விளக்கமாக அறியாமல் திருப்திப்பட மாட்டார்.

"அதுதான் படிச்ச புள்ளயளுக்கு எனத்தியோ கூட்டமாம்... அன்டக்கி அந்தக் குட்டி வந்து செல்லீட்டுப் போனேன்" முந்திக்கொண்டு கணவனுக்கு விளக்கம் கொடுத்தாள் ரஸீனும்மா.

"எந்தக் குட்டியன்?" விடுவாரா அவர்.

"தெரியவா மரீனா... சமுர்தீல வேல செய்தவள்."

"ஆ... ஆ... அவளா... செரியான ஏன்டுமத்தனம் புடிச்சவள்.. மனிசரத் தெரிபடுகியல்ல. சடுஸ்புடுஸ்ஸென்டு போறவாரெல்லாம... நானும் எத்தினயோ பைணம் பஜாரில கண்டீக்கி" ஹம்தூன் நானா நிராகரித்துப் பேசினார்.

"காணிய காணிய எடமெல்லம் ஒங்களோட பேசிப் பேசீக் கேலுமா. ஜாதிக் கோட்டியேன். நீங்க பேசீம் பேசாமப் பெய்த்தீந்தா, அன்ன குத்தம் செல்லேலும்." அவளும் விட்டுக் கொடுக்கவில்லை.

நிஸாவுக்கு தைரியமாகவிருந்தது.

"சரி சரி நான் வாணான்டு செல்லல்ல. அதுபோல பெய்த்திட்டு வந்திரோணும்."

எப்படியோ இறுதியில் அனுமதிப் பத்திரம் வழங்கிவிட்டார்.

மாலை மூன்று மணியாகும் போது ஸஹ்தியா ஆரவாரமாக வந்து சேர்ந்து விட்டாள். நிஸாவும் உடுத்துப் படுத்துத் தயாரானாள்.

"அஸராகீட்டு கோப்பி குடிச்சிட்டுப் போங்கொ ரெண்டு பேரும்" என்றவாறு கோப்பிக் கோப்பையோடு வந்தாள் ரஸீனும்மா.

அந்த நேரத்தில் கோப்பி ஒரு தெம்புதான்.

இருவரும் பாதைக்கிறங்கினார்கள். தூரத்தே இன்னும் இரண்டொருவர் போவது தெரிந்தது.

"போற வாரது சரி... அன்ன பேச்சிவாத்த கேட்டுக்கொளாம் அதபொழுக்கமா நடந்து கொளோணும்."

மகளை மையப்படுத்தி மனைவிக்குப் புத்தி சொல்லி விட்டு அவரும் மெல்ல இறங்கினார். கடையடிக்குச் சென்றால்தானே புதிய செய்திகளிருந்தால் அவர் காதிலும் விழும்.

## ३.

மரீனாவுக்கு வேறெதுவும் ஓடவில்லை. கூட்டத்துக்கான எல்லா ஒழுங்குகளும் பூர்த்தியாகியிருந்தன. முப்பது பேருக்கு கடிதம் கொடுத்திருந்தாலும் ஒரு பத்துப் பேர் வந்தாலே பெரிய விஷயமென்பதே அவர்களது எதிர்பார்ப்பு.

"எல்லாரும் வாரொண்டும்" கடிதங்களை விநியோகித்த றம்ஸியாவின் நம்பிக்கை.

அவர்களோடும் சற்று முன்பின்பாகவும் படித்தவர்களையே இலக்கு வைத்திருந்தார்கள்.

மரீனா கால்களில் சக்கரம் பூட்டிக் கொண்டு இயங்கினாள். பொறுப்புக்களைப் பிரித்துக் கொடுத்திருந்தாள். தேநீருக்கான ஏற்பாடு வேறு செய்யப்பட்டிருந்தது.

வழமை போல் ஏதோ சமூர்த்திக் கூட்டம் என்ற மனப்பதிவில் அதிபர் பாடசாலையைப் பயன்படுத்த அனுமதி வழங்கியிருந்தார்.

பகல் சாப்பிடும் போதுதான் ஜெமீல் நானாவுக்கு கூட்ட விஷயம் தெளிவாகியது.

மகளுக்கு ஊரில் ஓர் இடம் மெல்ல மெல்ல உருவாகி வருவதையிட்டு அவருக்கு பெருமை பிடிபடவில்லை. மகளை ஒரு ரீச்சராகப் பார்க்க வேண்டுமென்று கனவு கண்டார். மகள் அடுத்தடுத்து பரீட்சைகளில் சித்தியடைந்த போது அந்த எண்ணத்துக்கு இன்னும் வலுவூட்டிக் கொண்டார்.

பல கட்டங்களில் அது ஈடேறாமல் போன போது, மிகுந்த சலிப்படைந்தார். எதிர்பாராத விதமாக சமூர்த்தி முகாமைத்துவ உதவியாளர் நியமனம் கிட்டியது.

"அந்தக் காலத்தில நாங்களும் வாலிபர் சங்கம் தொடங்கின மகள். அத்து குத்தூஸ், மம்மகாசீம்... நாங்களியள் செய்யாத ஜாதில்ல. எத்தின பைணம் வெலாட்டுப் போட்டி நடத்தினன். பொறகு பொறகு எல்லம் இல்லாப் பெய்த்தேன்." ஜெமீல் நானா இளமைக் காலத்தைக் கொஞ்சம் நினைவூட்டினார்.

"அதுசரி வாப்பா... பொறகு எப்பிடியன் இல்லாப் போன?"

அவர் எதிர்பார்க்காத கேள்வியைத் தூக்கிப் போட்டாள் மரீனா.

பொது அமைப்புக்கள் ஊர் மட்டத்தில் செயற்படாமைக்கு எங்கோ ஓர் இடத்தில் விழுந்துள்ள ஓட்டையை அறிந்து கொள்ள இது நல்ல சந்தர்ப்பமாகப்பட்டது அவளுக்கு.

"ஊரில சல்லி சேத்தியேன் செய்த. எங்கட ஆள்கள் கணக்கு வழக்கில ஜில்மால் பண்ணீட்டானியள். மத்தது... பரிசி குடுக்கச் செல்லே மத்திச்சம்மாரக் கூப்பிடல்லயென்டு வெலாட்டுப் போட்டிய கொழப்பீட்டாங்க... அதோட எல்லாஞ் சரி..."

"மெய்யா...?" அவளுக்கு புரிந்துவிட்டது.

அதற்கிடையில் அவளை அழைத்துச் செல்ல றம்ஸியாவும் இனாயாவும் கைகோர்த்தபடி வந்திருந்தார்கள். இரண்டு பேரதும் கபாயாக்களைப் பார்த்தபோது ஏங்கிப் போனாள் மரீனா. அவள் திட்டமிட மறந்த விடயம் அது.

மூன்று பேரும் பாடசாலைக்குச் செல்லும் போது அங்கே பதினைந்துக்கு மேற்பட்டவர்கள் வந்திருந்தார்கள்.

அழைப்பு விடயத்துக்கு றம்ஸியா பொறுப்பாகச் செயற் பட்டதால் அவளது கண்கள் படபடவென்று சுழன்று வரவுப் பதிவு நடத்தின.

அப்போதுதான் ஃபர்வீனா அங்கு வந்து சேர்ந்தாள். அவளது வரவு மிகவும் எதிர்பார்ப்புக்குள்ளாகியிருந்தது.

மரீனா ஓடிப்போய் கைகொடுத்து அணைத்தாள். அவள் பேராதனை பல்கலைக் கழகத்திலே படிப்பவள். கஷ்டமான குடும்பத்திலிருந்து தனது திறமையினால் முன்னேறியவள். பலருக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவள்.

அன்று பாடசாலையில் மேலதிக வகுப்புக்கள் இடம்பெற்றன போலும். அதற்கு வந்த பிள்ளைகள், பாடசாலையோடு சம்பந்த மில்லாதவர்களெல்லாம் எதற்காக வந்திருக்கிறார்களென்று யோசித்தபடியே கடந்து சென்றார்கள்.

“சரி நேரமாகீட்டு தொடங்கோமா?” இனாயா மணிக்கூட்டைப் பார்த்தபடி கேட்டாள்.

நான்கு மணியாகி விட்டதால் அதற்கு மேல் எவரையும் எதிர்பார்த்திருப்பது பொருத்தமாகப் படவில்லை.

கிறாத்துடன் கூட்டம் ஆரம்பித்தது.

“இது ஒரு கூட்டமல்ல. எங்கட ஊருக்கு தேவயான செல விஷயங்களப்பத்தி பேசத்தான் எல்லாரேம் வரச்சென்ன. இந்த மசூராவ இப்ப ஃபர்வீனா ஆரம்பித்தா நல்லாயீக்கும்” தலைமைப் பொறுப்பிலிருந்த மரீனா தெரிவித்தாள்.

எல்லோருக்கும் மிகுந்த உற்சாகமாகப் போய்விட்டது. ஃபர்வீனாவின் பேச்சைக் கேட்பதில் அவ்வளவு ஆர்வம்.

“நான் கெம்பஸில பல ஊரிலீந்தும் வந்தவங்கள சந்திச்சன். ஒவ்வொரு ஊரேம்பத்தி அறிஞ்ச நேரத்தில ஏன்ட மனசீல பெரிய கவல வந்திட்டு. நாங்க எங்களுக்காக மட்டும் வாழப் படாது. மத்தவங்களுக்காக ஊருக்காக... எனத்த சரி செய்யோணும். நாங்கெல்லாரும் படிச்ச பொம்புளப் புள்ளயள். எங்கட மட்டத்தில எங்களால ஏன்டதச் செய்யோம்.”

ஃபர்வீனாவின் நீண்ட பேச்சு எல்லோருடைய மனதையும் தொட்டது. பலரும் அது பற்றி தங்களது அபிப்பிராயங்களை வெளியிட்டனர். மிகவும் பெறுமதியான கருத்துக்களெல்லாம் வெளிப்பட்டன.

“வாங்க ரீச்சர் வாங்கொ”

எதிர்பாராத விதமாக, அழைப்பு விடுக்கப்படாத போதும் அம்ரிதா ரீச்சர் வந்து சேர்ந்தார்.

"ஒங்கட ஊரு விஷயத்துக்கு நான் வரேலுமோ தெரிய... நான் வெளியூர்க்காரி. நல்ல விஷயமொன்டு நடக்கியென்டு கேள்விப் பட்ட."

கூட்டம் இன்னும் ஒருபடி களை கட்டியது.

இடைவேளையின் போது தேநீர், சிற்றுண்டிகளெல்லாம் பரிமாறப்பட்டன.

மிகுந்த கலகலப்போடு மாதர் முன்னேற்றச் சங்கம் அங்குரார்ப்பணமாயிற்று.

# 4.

**போ**க்கடிச் சந்தி வல்லையூர்க் கிராமத்தின் முக்கியமான தொரு இடம். நேர்ப் பார்வைக்கு பெரிய பள்ளிவாசல் கம்பீரமாகத் தெரியும். மாத்தறை - கதிர்காமப் பாதை எப்பொழுதும் வாகனங் களால் நிரம்பி வழியும். ஒரு பக்கமாக மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் ஒழுங்கை.

இவை எல்லாவற்றையும் விட மம்மது நானாவின் தேநீர்க் கடை இருக்கிறதே அது மிக மிக முக்கியமானது.

ஹோஹோவென்று வியாபாரம் நடக்காவிட்டாலும் எப்பொழுதும் ஒரு சனக்கூட்டம் அங்கே மொய்த்திருக்கும். நாள் தவறாமல் சிங்களப் பத்திரிகையொன்றும் தமிழ்ப் பத்திரிகை இரண்டும் வாங்கிப் போட்டு விடுவார். வசதியாக அமர்ந்து வாசிப்பதற்கு வாங்குகள் வேறு.

வாசிப்பது ஓசியிலென்றாலும் சுடச் சுடப் பிளேன்ரீ குடிக்கத் தவறமாட்டார்கள். கூடவே பாணியாப்பையோ சீனிக் கோவையோ கடிக்கவும் மறக்கமாட்டார்கள்.

ஊடகத்துறைச் செய்திகள் மாத்திரமன்றி உள்ளூர்ச் செய்தி களும்கூட அங்கே சூடான விவாதத்துக்கும் கலந்துரை யாடலுக்கும் எடுத்துக் கொள்ளப்படுவதுண்டு.

முதல்நாள் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட மாதர் முன்னேற்றச் சங்கம் தொடர்பான அலசல் அன்று முக்கிய இடம் பிடித்திருந்தது.

“சும்மா பொம்புளக் கூத்து. இந்தச் சங்கம் கிங்கம் இங்க சரிவாரல்ல. ஆம்பிளயளால செய்யேலாதது பொம்புளயளால ஏலுமா” சவ்வாது மிகவும் நையாண்டியாகத் தாழ்த்திப் பேசினான்.

“மெய்தான் மெய்தான். அந்த டைமில நான் சின்னப் பொடியன். கிராம அபிவிருத்தி சங்கத்தில கொழப்பமாமெண்டு ஓடியோடிப் போன பாக்க. சனம் நெறஞ்சி... ஆள்கள் புட்டுவத் தால அடிச்சிக் கொளுகிய. பொலிஸால வந்து மூடினது மூடினது தான். கொஞ்ச நாள் போட் மட்டும் தொங்கின. அதோட எல்லம் முடிஞ்சி” இஷாக் ஊர்ப்பெருமை பேசினான்.

“இங்க பாருங்கொ எந்த நாளும் இப்பிடிச் செல்லிச் சரி வாரல்ல. இது படிச்ச புள்ளயள் சேந்து தொடங்கீக்கி. அவங்க ளால ஏண்டத்த அவங்க செய்யட்டும்...” வேறொரு கோணத்தில் இல்லியாஸ் அபிப்பிராயம் தெரிவித்தான்.

“ஓ... ஓ... சமூர்த்தி மரீனவாம்... கெம்பஸில படிக்கிய புள்ளயாம்... ஸ்கூல் ரீச்சரொண்டாம்... தாரு சரி செய்யட்டே” அல்லமீனின் ஆதரவுக் குரலும் இணைந்தது.

“இன்ன பாருங்கொ நான் ஒன்டு செல்லியன். பொம்புள தலயெடுத்தா ஒன்டும் சரிவாரல்ல. இவளியள் மிச்சம் படிச்சா முஸீபத்துத்தான்” எல்லாம் கேட்டுக் கொண்டிருந்து விட்டு மதீன் சாச்சா அனுபவம் பகிர்வு செய்தார்.

ஆளோடு ஆளாகச் சேர்ந்து காதோடு காது கொடுத்துக் கொண்டிருந்த ஹம்தூன் நானா தொண்டையில் பிட்டு இறுகியது போல் பேசாமலே இருந்துவிட்டார். ஒட்டுமொத்தமாக இந்த ஏற்பாட்டுக்கு வரவேற்பு இல்லை என்பது மாத்திரம் அவருக்குப் புரிந்தது.

அவரது மகள் நிஸாவும் மேல்வளவு ஸஹ்ரியாவும் கூட சென்று கலந்துகொண்ட போதும் அவர் அதை முழுமையாக ஏற்றுக்கொண்டார் என்பதற்கில்லை.

கறிகாய் வாங்கப்போன மனிதன் இவ்வளவு சீக்கிரமாக வருவது ரஸீனும்மாவுக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

நல்லதோ கூடாதோ இத்தோடு இந்தத் தொடர்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டுமென்பதே அவரது முடிவாக விருந்தது.

“எனத்தியன் போன சிருக்கே ஓடி வார” மனைவியின் வரவேற்பு இது.

கெலவல்லன் மீன் துண்டையும், பலாக்காய்க் கீற்றையும் மனைவியின் கையில் கொடுத்துவிட்டு அங்குமிங்குமாகப் பார்த்தார்.

“எனத்தியன் பாக்கிய...ம்”

"நிஸாவத்தான்"

"அது கெணத்தடீல"

"கூப்பிடுங்கொ"

ரஸீனும்மாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

நேற்றைய சமாச்சாரம் அவளது ஞாபகத்திலேயே இருக்கவில்லை.

" இங்க வா மகள் வாப்பா கூப்பிடுகிய" ஜன்னலால் எட்டிப் பார்த்துச் சொன்னாள்.

"வாப்பா... இப்பதானே போன" என்றவாறு முகத்தைத் துடைத்தபடி வந்தாள்.

"இப்ப போக்கடீல பேசியத்தியளக் கேட்டுக் கொண்டீந்திட்டுத் தான் ஓடிவந்த. மகள் கொஞ்சம் சொல்லியத்தக் கேளு. இந்தச் சங்கம் கிங்கம் எங்களுக்கு சரிவாரல்ல. இதோட நிபட்டிக் கோங்கொ... அன்ன ஒருக்கத்தான் செல்லிய"ஹம்தூன் நானாவின் குரல் சற்று தடிப்பாகவே விழுந்தது.

நிஸா நொந்துதான் போனாள். அவளுக்குள் கிளர்ந்தெழுந்த சமூக உணர்வுகள் அப்படியே பொசுங்கிப் போயிற்று.

'ஒவ்வொத்தரு ஒவ்வொரு ஜாதியச் செல்லியதான். அதிய்ள கேட்டுக் கேட்டு நடந்தா நல்லாயீக்கும்' தனக்குள் குமுறி வெடித்தாள் அவள்.

# 5.

"அஸீனும்ம தாத்தா ஒங்களுக்கு காயிதம் வந்தா?"

"என்ன காயிதமன்?"

"அன்டக்கி சமூர்த்தியால ஊட்டியளுக்கு பாக்க வந்தேன். அங்கீந்துதான்"

"எங்களுக்கு வரல்ல. எனத்தியாம்?"

"அம்பது கோழிக்குஞ்சு தாராம். கோழிக்கூடு கட்டியத்துக்கு சல்லீம் தாராம்."

"மெய்யா... அப்ப எங்களுக்கு எனம்பாம் அனுப்பல்ல?"

"தாருக்கன் தெரிஞ்ச... காயிதம் வரங்காட்டீம் எங்களுக்குத் தெரிய"

“ஞாயமில்லாத வேலயேன். ஒத்தருக்கு குடுத்திட்டு இனு மொத்தருக்கு குடுக்காமீக்கிய”

“எனத்தியோ தெரிய. அந்த சமூர்த்தி குட்டீக்கெட்ட கேட்டுப் பாருங்கொ.”

வேலிக்கு இரு பக்கமாகவும் நின்று அஸீனும்மாவும் உம்முகுல்ஸூம் பேசிக்கொண்டனர். அது சற்றே முறுகல் நிலையை நோக்கி நகர்ந்து நின்றது.

அஸீனும்மா அவசர அவசரமாக பிடவையை சொருகிக் கொண்டு வெளியே பாய்ந்தாள். ஒரு சுற்றுச் சுழன்று வந்து உண்மை நிலையை தேடுவது பிரதான நோக்கம். எங்கேயாவது போய்ப் புகுந்துவிடவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

“அஸீனும் தாத்தோ”

இந்த அழைப்புக் குரல் அவளுக்கு தேனாக இனித்தது.

அத்துக் காதர் நானா பல்லைக் காட்டியபடி வரவேற்கத் தயாராக நின்றார்.

“ஏத்தியன் கூப்பிட்ட. கோப்பி தேத்தண்ணி ஊத்தீக்கா?”

“ஊத்தப் போற வாங்கொ... ஒங்கட மூக்குத்தூள் டப்பிய கொஞ்சம் தாங்கொளே”

அஸீனும்மாவுக்கு இந்த அன்பான அழைப்பின் நோக்கம் இப்போதுதான் வெளிச்சத்துக்கு வந்தது.

"ம்... நாங்க கஷ்டப்பட்டு கையால கசக்கி ஒங்களுக்குத் தரோணும்" என்றபடியே தூள் டப்பியை நீட்டினாள்.

"எனக்கும் கொஞ்சம் தாங்கொ"

சும்மா கிடைக்கும்போது விடுவார்களா?

அத்துக்காதரின் மனைவி மரியம்பீபியும் ஒரு பிடிபிடித்தாள்.

"இரீங்கொ கோப்பி குடிச்சிட்டுப் பொகோளேன்."

"சுருக்காத் தண்ணிய வெய்... ம்... ஏத்தியன் அத்துக்காதரு கோழிக்குஞ்சு குடுக்கியாமெண்டு கதக்கிய"

"அது எங்களியளுக்கு கெடக்கியல்ல. பதினெட்டு வயஸு பிந்தின பொம்புளப் புள்ளயொன்டு ஊட்டில நின்டாத்தான் குடுக்கியாம்... ம்... எங்களுக்கு கெடக்காட்டீம் ஊரில நாப்பதம்பது பேருக்குக் கெடக்கியாம்... நல்லந்தானே"

"ம்... இந்தாங்கொ கோப்பி"

அதற்கிடையில் கோப்பி வந்துவிட்டது.

"சரிபுள்ள நான் பெய்த்திட்டு வாரன்"

நெஞ்சில் ஏறிய கொதி பூச்சியத்தை அடைந்தவளாக வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் அஸீனும்மா.

அந்தச் சில நாட்களாக ஊரெங்கும் கோழிக்கதைதான். இந்தப் பெரிய நன்மையை சமூர்த்தி மரீனாதான் முன்னின்று பெற்றுக் கொடுத்ததாக பரவலாகக் கதைக்கப்பட்டது.

அன்று கோழிக்குஞ்சு விநியோகம் நடைபெற்றது. மாதர் சங்கத்தை சேர்ந்தவர்களின் உதவியோடு காரியம் மிக இலேசாக நிறைவேறியது.

"சமூர்த்திக் குட்டி அவளுக்கு வேண்டியவங்களுக்கு மொகத் தாச்சின் பாத்துக் குடுத்தீக்கி. இத உடப்படாது. கேக்கோண்டிய எடத்தில கேக்கோணும்"

இப்படித் துள்ளிக் குதித்துக் கொண்டு சில பேர் மரீனாவின் வீட்டையே சுற்றி வளைத்து விட்டனர்.

அவளுக்கு சிரிப்பு சிரிப்பாக வந்தது. தெரிவுக்கும் அவளுக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. படிவம் நிரப்பிக் கொடுத்ததோடு அவளது கடமை பூர்த்தியாகிவிட்டது.

"எங்கட மகள் அங்க செல்லியத்த செய்த. நீங்களியள் டீஎஸ் ஒபீஸுக்குப் பெய்த்துக் கேளுங்க" இடையில் குறுக்கிட்ட ஜெமீல் நானா விளக்கம் கொடுத்தார்.

"சரி சரி நல்ல பாடம் படிப்பிக்கியன்"

திரும்பிச் சென்றவர்களில் ஒருவனின் முகம் தெரியாக் குரல் இது.

இதற்கிடையில் தையல் பயற்சி வகுப்பில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் விநியோகம் ஆரம்பித்திருந்தது.

"சும்மா இவள் உசுப்பிக் கொண்டு திரீத"

சகிக்க முடியாத சிலதுகள் மரீனாவின் காதுக்குக் கேட்கவே குத்து வார்த்தைகள் கூறத் தவறவில்லை. இவற்றையெல்லாம்

எதிர்கொள்ளத்தான் வேண்டுமென்று அவளுக்குத் தெரியாதா என்ன!

"மரீனா ஒன்னச் ரீச்சர் வரச்சொல்லி அனுப்பீந்த"

இப்பொழுதுதான் ஞாபகம் வந்தவளாக மரீனாவின் உம்மா சொன்னார்.

அம்ரிதா ரீச்சர் நல்ல ஆங்கிலப் புலமை கொண்டவர். அதே போன்று தொடர்பாடல் மிக்கவர். ஏதாவது சாதிக்க வேண்டுமென்ற வேட்கை கொண்டவள்.

மரீனா வீட்டிலிருந்து வெளிக்கிட்டாள்.

# 6.

**கோ**ழிக்குஞ்சுக் கதை ஊரெல்லாம் வேகவேகமாகப் பரவிக்கொண்டிருந்தது.

எதிர்பாராத விதமாக பல குடும்பங்களுக்கு பக்க பலமாக அது அமைந்ததை சீரணிக்க முடியாமல் தாழ்வுச் சிக்கலில் பலர் தடுமாறிக் கொண்டிருந்தனர்.

"தாரு எனத்த சென்னாலும் அந்தக் குட்டி கெட்டிக்காரிதான். சிங்கள அசல்லேம் அவளுக்கு நல்ல மதிப்பாம்'' இப்படி வாய்விட்டுப் பாராட்டும் நிலைக்கு இன்னொரு கூட்டம் தள்ளப் பட்டிருந்தது.

கூடவே தையல் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந் தமை இன்னொரு அலையைக் கிளப்பியிருந்தது.

மாதர் முன்னேற்றச் சங்கம் மெல்ல மெல்ல தலையைக் கிளப்பிக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் ஜெமீல் நானாவின் நிலைப்பாடு பெரிய சங்கடம்தான்.

பாராட்டு ஒருபக்கம். எதிர்ப்பு நடவடிக்கைகள் இன்னொரு பக்கம். சந்தர்ப்பத்திற்கேற்ற விதமாகப் பேசவும் ஏசவும் ஜெமீல் நானா தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார்.

மரீனா அப்பொழுது பிரதேசச் செயலகத்திற்குப் போயிருந்தாள். அன்று ஒரு புதன்கிழமை. ஜெமீல் நானாவும் செய்னம்புவும் வீட்டிலிருந்தார்கள்.

ஸலாம் போட்டுக்கொண்டு அரை வயது தாண்டிய ஒரு தம்பதி வீட்டுக்குள் புகுந்தனர்.

நிமிர்ந்து பார்த்தபோது யாரென்பதை இனம் கண்டு கொண்டார் ஜெமீல் நானா. ஊர் ஜெம்மிகளை தெரியாமல் போகுமா என்ன?

"எனத்தியோ தெரிய இந்தப் பொக்கத்துக்கு வந்தீக்கி" என்றவாறு அவரது மனைவியும் முன்னே வந்துவிட்டாள்.

"எப்பிடியன் சொகம் சுவாத்தியமியள்?"

"அல்லாட கிருபயால சொகமாயீக்கிய பாத்தும் தாத்தா"

"எங்கியன் மகளக் காணல்ல?"

"ஓ... ஊரு வேலயெல்லம் தலேல போட்டுக் கொண்டு ஒரு நிமிஷம் ஊட்டில நிக்கியல்ல"

"நல்லந்தானே... மனிசரு கதகாரணம் சென்னாலும் அல்லாட்டக் கெடச்சிப் போறேன்"

“ஓ அந்தக் குட்டிக்கி செரியான கண்ணூறு”

“ம்... கண்ணால தின்டுபோடிய... மம்மகாஸிம் லெப்பயக் கூப்பிட்டு தெசிக்க வெட்டுப் போடுங்கொ”

“அதியளுக்கும் புரியமில்ல... கொமருப் புள்ளயேன். அவளுக்குத் தெரியாம கண்ணூறு கழிக்கியத்துக்கு நான் எத்தின ஜாதியச் செய்தன். தெரீமானாப் பீஸபீருதான்.”

இப்படிக் கொஞ்ச நேரம் பலாய் கழுவிவிட்டு விஷயத்துக்கு வந்தாள் பாத்தும் தாத்தா.

“ஊரில எதினயோ ஸொரத்தாருக்கு கோழிக்குஞ்சு குடுத்தீக்கி... எங்களுக்கென்டா ஹறாமாயீக்கும் கெடக்கல்ல. ஒங்களுத் தெரீந் தானே எங்கட கஷ்டத்த. அன்டயன்டக்கி காலம்போற... எங்களுக்கும் பாத்து ஒதவி செய்யச் சொல்லுங்கொ”

“ஓ... இனி கோமேந்தால குடுக்கியதேன். மகளோட நான் செல்லியனே. நீங்கினி பொறத்தீ மனிசரல்லேன்”

பாத்தும் தாத்தாவுக்கு வந்த இலக்கை அடைந்துவிட்ட பூரிப்பு. மகிழ்ச்சிப்பூ பூத்தது.

முன்னே வதூத் நானாவோடு கதைத்துக்கொண்டிருந்த ஜெமீல் நானா, உள்ளே வந்து “அப்ப நான் பஜாருக்கு கொஞ்சம் பெய்த்திட்டு வாரன். ஹதிஸ்ஸி வேலயொன்டு” என்று மனைவி யோடு சொல்லி விட்டு சைக்கிளைத் தள்ளிக்கொண்டு முற்றத்துக்கு வந்தார்.

அவர் முச்சந்தியைக் கடந்து ஸவோனிஸ் அப்புவின் கடையைத் தாண்டுகையில் “ஜெமீல் நானா ஜெமீல் நா,னா” என்ற குரலையும் கைதட்டலையும் கேட்டுக் காலைக்குத்தி நின்று திரும்பினார்.

“ஓங்களுக்கு ஹயாத்து நூறு. ஊட்டுக்கு வரப்பாத்த ரெண்டு பேரும். நீங்களே வந்திட்ட. வாங்கொ வாங்கொ பிளேன்டீ யொன்டு அடிச்சிட்டுப் பேசோம்.”

ஓடர் கொடுத்து விட்டு மூவரும் அமர்ந்து கொண்டனர்.

ஜெமீல் நானா சின்னச்சின்ன புரோக்கர் யாவாரங்கள் பண்ணுவதால் அப்படி ஏதோவென்றுதான் நினைத்தார்.

பிளேன்டீ சூடாக இறங்கியது. கூடவே சிகரட்டுகளும் புகைந்தன.

“ஜெமீல் நானா எங்களுக்கும் கோழிக்குஞ்சி எப்பிடிச்சரி பாஸாக்கித் தாங்கொ. ஆத்தில போற தண்ணிய தாரு குடிச்சா எனத்தியன். நாங்க மூணு பேரும் சேந்து சின்ன யாவாரமொன்டச் செய்யோம். நீங்க ஸபோட் பண்ணினாச் சரி. ஓங்கட பங்கு நேரே ஊட்டுக்கு வரும்.”

ஜெமீல் நானாவுக்கு மெல்லிய வியர்வை போட்டது.

“சரி பாக்கோம்” என்று சிரித்துச் சமாளித்துக் கொண்டே எழுந்தார்.

இருவரும் ஒருவரையொருவர் சுரண்டி பரஸ்பரம் முகம் பார்த்துச் சிரித்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர்.

# 7.

**சி**ன்னப் பள்ளிவாசல் மின்விளக்கால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

சிறுவர்களின் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் அங்கே நடை பெற்ற வண்ணமிருந்தன. அதனைப் பார்த்து மகிழ ஏராளமான பெற்றோர் திரண்டிருந்தனர்.

மஃரிபு நெருங்கும் போது போட்டிகள் யாவும் பூர்த்தி நிலை பெற்றன. முடிவுகளை உரியவர்களிடம் கையளித்த பின்பே அவர்களுக்கு நிம்மதி ஏற்பட்டது.

இந்தப் பொறுப்பினைக் கையேற்றிருந்த வாலிபர்கள், கொஞ்சம் ஆறுதலுக்காக சின்னப்பள்ளி மேல்மாடியில் சர்பத் குடித்தபடி அமர்ந்திருந்தனர்.

இரவுக் கந்தூரிக்கான ஏற்பாடுகள் பின்கட்டில் இடம் பெற்றதாலோ என்னவோ, நெய்ச்சோற்று மணம் இப்பொழுதே வந்து மூக்கில் முட்டியது.

"பொம்புளக் குட்டியள் சங்கம் தொடங்கீக்காம்... கேள்விப் பட்டா"

ரிபாஸ் தொடர்ந்து பேசத்தக்கதொரு விடயத்தை ஆரம்பித்து வைத்தான். பலரும் எதிர்பார்த்திருந்த விடயமும் கூடத்தான்.

"சமூர்த்தி மரீனா காரியதரிசியாம்" பாரிஸ் பட்டியலை விரித்தான்.

"ஒனக்கு ஒரே மரீனாதான். தலைவர் தாரெண்டு செல்லு" இடையில் குறுக்கிட்டான் இம்திஸாம்.

"கெம்பஸ் ஃபர்வீனா"

"மெய்யா..."

"கெம்பஸுக்கு பொகமுந்தி எல்லாரும் ஒன்டாப் படிச்சவங்க தான்"

"சரி நல்ல விஷயம்தானே. ஆம்பிளயள் செய்யாட்டி பொம்புளயள் சரி செய்யட்டும்" இடையில் ஒரு கிண்டல் போட்டான் பாரிஸ்.

எல்லோர் மனதிலுமே ஒரு போதாமையுணர்வு இழை யோடியது.

“எங்கடூரில ஒரு ரியூசன் கிளாஸாலும் இல்ல... சல்லி யெடுத்துக் கொண்டு படிச்சிக் குடுத்தாலும் புள்ளயளுக்கு நல்லந்தானே”

“இங்க பாரு... எத்தின தொடங்கினன். பொறகு பொறகு இல்லாப் போற. பொம்புளப் புள்ளயள் ஆசயோட படிக்க வார... இனி இல்லாத பொல்லாத கதயளச் செல்லிய... முடும புடிச்ச ஊரு...”

“டேய் நடக்காத விஷயங்களப் பேசி வேலில்ல. அவங்க தொடங்கீக்கியத்துக்கு எங்களால ஏண்டிய சபோட்டக் குடுக்கோம்.”

அந்த முடிவுக்கு எல்லோரும் இணங்கினர்.

“இப்ப பேசீட்டு... நாளக்கி நீ கொழும்பில... நான் பேங்கில... இவன் கச்சேரில... மறுபேணம் சந்திச்சா பேசிய... எழும்பு வாவா... இப்பவே மரீனாங்கட ஊட்டுக்குப்போம்” இம்திஸாம் எழுந்து நின்றான்.

இறங்கு படிகளில் அனைவரதும் கால்கள்.

குட்டிக் குட்டிக் கடைகள் பாதையின் இருபக்கமாகவும் காணப்பட்டன.

“மரீனாவுக்கு கொஞ்சம் மிக்ஷர் எடுங்கடா”

மரீனாவும் அவர்களும் ஒரே வகுப்பில் அடுத்தடுத்து படித்த வர்கள். பல சந்தர்ப்பங்களில் அவளோடு சண்டை பிடித்து தோற்றுப் போனவர்கள்.

இன்று சின்னப் பள்ளிக் கந்தூரி. நண்பர்கள் உறவினர்கள் வீடுவீடாக ஏறி இறங்கும் நாள்.

ஜெமீல் நானா எல்லோரையும் வரவேற்றார்.

பேச்சுக்குரல் கேட்டு ஓடிவந்த மரீனா எதிர்பார்க்காத காட்சி கண்டு மகிழ்ந்தாள்.

“ஆ தாரன் ஒங்களியளுக்கு ரோட்டுக் காட்டின.”

“பெரிய எடங்களுக்கு வாரத்துக்கு ரோட்டுக் காட்டத் தேவில்ல” பதிலடி கொடுத்தான் பாரிஸ்.

அதற்கிடையில் மஸ்கட், கோப்பி உபசாரம்.

“திண்டு திண்டு பேசோம்”

“பெரிய சங்கமெல்லம் தொடங்கீக்காம்... நல்ல விஷயம். நாங்களும் எங்கட ஸபோட்டத் தார. அதச் செல்லத்தான் வந்த” இம்திஸாம் அனைவர் சார்பிலும் சொன்னான்.

“மெய்யா. மிச்சம் நல்லம். ஆம்புளயள் செய்யாட்டி நாங் களாலும் செய்யோனேன்” அவள் விட்டுவிடவில்லை.

மஸ்கட் சாப்பிடுவதில் இரண்டாம் சுற்று ஆரம்பமாகியது.

“இம்திஸாம் பெரிய எடத்துக்கு பொகப் போறாமெண்டு கேள்விப்பட்ட... ஆ... பழய விஷயமெல்லாம் இப்ப மறந்து பெய்த்து”

தான் இன்னும் பழைய மரீனாவேதான் என்பதை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டாள்.

அவன் எதுவும் பேசாமல் சிரித்து மழுப்பிவிட்டான்.

மஃரிபுக்கு பாங்கு சொல்லும் வரை பலதும் பத்தும் கதைத்தார்கள்.

அவர்கள் விடைபெற்றுச் சென்ற போதும் மரீனா மகிழ்ச்சிகர மனோநிலையிலிருந்து விடுபடவில்லை.

நல்ல நோக்கங்களுக்கு எல்லாப் பக்கத்திலிருந்தும் நல்லாதரவு வந்து சேருமென்பது நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

# 8.

"பொம்புளக் குட்டியள் டுவர் பொகப் போறாம்" என்ற செய்தி இங்குமங்குமாக மெல்லப் பொசிந்து கொண்டிருந்தது.

சர்தார் நானாவின் காதுகளை இச்செய்தி எட்டியபோது அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவருடைய மகளும் அதற்குத் தயாராகிக் கொண்டல்லவா இருந்தாள்.

சொல்லி அதட்டும் வயதா என்ன! அதுவும் கெம்பஸ் முடித்துவிட்டு வந்திருக்கும் பிள்ளையை தடுத்து நிறுத்துவது நாகரிகமாகவும் படவில்லை.

அவர் மெதுவாக மனைவியின் காதில் போட்டுவிட்டு மெல்ல நழுவிவிட்டார்.

ஸித்தி தாத்தாவுக்கு 'அழத்தி பத்துதல' எடுத்துவிட்டது.

கெம்பஸ் படித்துவிட்டு வந்த அந்த கௌரவத்தை பாதுகாத்துக் கொள்ளாமல் இப்படி கண்ட நின்டதுகளுடன் கூடித்திரிவது சர்தார் நானாவிற்கொ ஸித்தி தாத்தாவுக்கோ கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அதேவேளை மகள் கூறும் நியாயங்களையும் மறுத்துரைக்க முடியவில்லை.

"மகேள் நாளக்கி எங்கியன் பொகப் போற? அவனவன்ட மதிப்ப வெச்சிக்கொளோனேன்"

உம்மா என்ன சொல்கிறாவென்று ஃபர்வீனாவுக்கு விளங்கி விட்டது.

இவர்களொன்றும் பாரம்பரியமான பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களல்ல. நிலபுலன், கடைகளென்று வருமானம் வந்து கொட்டவுமில்லை. ஃபர்வீனாவின் படிப்பின் மீதே சிறகு கட்டிக் கொண்டு மேலே மேலே பறக்க முனைகிறார்கள்.

"நாங்க ஊரு சுத்தப் பொகல்லும்மா. அர்சாங்கத்தால ஏற்பாடு செஞ்சீக்கி. எங்களப் போல எல்லா ஊரிலீந்தும் அங்க ஆள்கள் வார."

ஃபர்வீனா கொடுத்த விளக்கத்தை ஸித்தி தாத்தா காதில் போட்டுக்கொள்ளவில்லை.

"இதியளுக்கு வாப்ப சாடயாலும் புரியமில்ல மகள். அந்த மனிசன் தின்னாமக் குடிக்காம எவளவு கஷ்டப்பட்டன் படிப்பிச்ச. பொம்புளப் புள்ளயள படிப்பிச்சி வேலில்லயென்டு எத்தின பேரு சென்னன்"

"அதெல்லாம் எனக்குத் தெரிந்தானே உம்மா. நான் எனத்தி யாலும் அசடான வேல செஞ்சிக் கொண்டு திரீதா. செல்லியவங்க செல்லுவாங்கதான்."

பெற்றோரின் மனோநிலை அவளுக்கு நன்கு புரிந்தது. அது சரியோ பிழையோ அதற்காக அவர்களோடு கோபப்பட அவள் விரும்பவில்லை.

ஃபர்வீனா அடிக்கடி தனது கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கத் தவறுவதில்லை.

வெளியூர் சென்று படிக்க எந்த வசதியும் அவளுக்கிருக்க வில்லை. அந்நாளைய அதிபர், ஆசிரியர்கள் மேற்கொண்ட பிரத்தியேக ஏற்பாடுகளை என்றுமே அவளால் மறக்க முடியாது.

பெரிய பாடசாலைகளுக்கு பெரும் வசதிகளோடு படிக்கப் போனவர்கள் பல்கலைக்கழகத்தை எட்டிக்கூடப் பார்க்காமல் வீட்டுக்கே வந்து முடங்கிவிட்டார்கள்.

செய்நன்றி மறக்காமல் ஏதாவது பிரதியீடு செய்யவேண்டு மென்று அவள் மனம் உந்திக் கொண்டேயிருந்தது.

பட்டதாரித் தகைமையோடு பல தொழில்களுக்கும் அவள் விண்ணப்பித்திருந்தாள். தொழில் ஒன்று கிடைக்கும் போது... திருமணமென்று வரும்போது திசைமாறிப் போய்விடக் கூடிய நிலைமைகள் நிச்சயம் உருவாகத் தான் செய்யுமென்பதை அவளறிவாள்.

அதனால்தான் இந்த இடைக்காலத்தில் மாதர் முன்னேற்றச் சங்கம் மூலம் ஏதாவது சாதிக்க எத்தனித்தாள்.

“பாருங்கொ ஃபர்வீனா எனக்கிட்ட எத்தினயோ பேரன்ஸ் வந்து வந்து கேக்கியாங்க. புள்ளயள அனுப்ப பயப்புடுகியாங்க. கொமருப் புள்ளயள நாங்க கூட்டிக்கொணு பெய்த்து அசடாக்கப் போறெண்டு நெனக்கியாங்க” நேற்று அம்ரிதா ரீச்சர் கவலை மேலிடச் சொன்னது அவளது காதுக்குள் எதிரொலித்தது.

பொய்ப் பிரசாரங்களைச் செய்து செய்து மக்களை இன்னும் இருட்டுக்குள்ளேயே பூட்டி வைக்க ஒரு கூட்டம் திட்டமிட்டுச் செயற்படுவது அவளுக்கு தெட்டத் தெளிவாகியது.

ஃபர்வீனா மக்களை இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்ச மாகப் படிக்க ஆரம்பித்தாள்.

பட்டப் படிப்பைவிட இது மிகவும் கஷ்டமான படிப்பாக விருந்தது.

எப்படியோ தப்பிப் பிழைத்து ஒரு அந்தஸ்தை எட்டி நிற்கும் நிலையில் ஒரு கடமையுணர்ச்சி அவளை உந்திக் கொண்டிருந்தது.

மரீனா போன்றவர்களால் முடியுமென்றால் என்னால் ஏன் முடியாதென்ற கேள்வி அவளை மேலும் மேலும் தைரியமூட்டியது.

# 9.

"**பொ**ம்புளப் புள்ளயள அந்த மட்டுத் தூரத்துக்கு அனுப் பேலுமா'' இப்படி சில பெற்றார்கள் கேட்டதில் நியாயமில்லை யென்று சொல்ல முடியுமா என்ன?

"அம்ரிதா ரீச்சர்தான் கூட்டிக்கொணு போற''

இந்தப் பதில் கிடைத்த பின்னர் எவருமே அதனை ஆட்சேபிக்கவில்லை.

காலியில் நடைபெறும் மகளிர் தினக் கொண்டாட்டத்திற்கு பத்துப் பேரை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாட்டை ரீச்சர் மேற்கொண்டிருந்தார்.

அந்தப் பத்துப் பேரும் யார் யார் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு மரீனாவைச் சார்ந்திருந்தது. றம்ஸியாவும் இனாயாவும் இணைந்து அந்தத் தெரிவை மேற்கொண்டனர்.

பலருக்கும் விருப்பமிருந்த போதிலும் பொது முடிவுக்கு எல்லோரும் கட்டுப்பட்டனர்.

இதுபற்றி தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கும்போதுதான் அந்தச் செய்தி அவர்களை வந்தடைந்தது.

ஃபர்வீனா பல்கலைக்கழக இறுதிப் பரீட்சை எழுதிவிட்டு வந்திருந்தாள். தொழில் வாய்ப்புக் கிட்டும்வரை சங்கப் பணிகளில் கூடுதலாக ஈடுபடும் தீர்மானத்தை ஏற்கனவே அவள் எடுத்திருந்தாள்.

“வெளணக்கி கொண்டாட்டம் அந்திக்கு கருத்தரங்கம். நீங்களும் கட்டாயம் வரோணும்” இப்படி மரீனா ஃபர்வீனாவை வேண்டினாள்.

மறுபேச்சின்றி அவள் ஏற்றுக்கொண்டபோது ஒரு பெரும் சாதகத் தன்மை அந்தச் சூழலில் ஏற்பட்டது.

போவதா இல்லையா என்ற தர்மசங்கடத்திலிருந்த சிலர் அதிலிருந்து விடுபட்டனர். ஏதோ கூத்தும் ஆட்டமுமல்ல பிரயோசன மான விடயந்தான் என்பதை பெற்றோரும் பூரணமாக நம்பினர்.

பயணத்துக்கு பிரத்தியேகமான வாகனம் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. காலைச் சாப்பாட்டுப் பொதிகள் தயார் செய்யப்பட்டன.

எல்லோருக்குமே இது புது அனுபவம்தான். ஒரு சுற்றுப் பிரயாணம் போன்ற உணர்வும் மேலோங்கியிருந்தது.

ஆறு மணிக்கே பயணம் ஆரம்பமாகியது.

அம்ரிதா ரீச்சர் பல்வேறு விளக்கங்களை வழங்கிய வண்ணம் சென்றார். சகலரோடும் மிகவும் அந்யோந்யமாக நடந்து கொண்டார். அவரைப் பற்றியும் அன்றுதான் பலரும் அறிந்து தெளிவு பெற்றனர்.

ஒன்பது மணிக்குப் போய்ச் சேர்ந்தால் போதுமென்பதால் அவர்கள் பெரிதாக அவசரப்படவில்லை. இடையில் நின்று காட்சிகளைப் பார்த்த வண்ணம் சென்றனர்.

கடலோரத்தில் காலைச் சாப்பாடு உட்கொண்டனர். குருத்து மணலிலே உலாவி இன்புற்றனர்.

"கடலில் அக்கரை போனோரே" என்ற பாடலை றம்ஸியா பாடியபோது எல்லோரும் கைதட்டி ஆரவாரம் செய்தனர். அதைத் தொடர்ந்து புதிய பாடகிகளும் அறிமுகமாகினர்.

உரிய இடத்தை அடையும்போது ஒன்பதுமணி நெருங்கி யிருந்தது. எல்லோரும் வரவுப் பதிவு செய்து அடையாளச் சின்னம் அணிந்துகொண்டனர்.

நூற்றுக் கணக்கான சிங்களச் சகோதரிகள் அங்கே வந்திருந் தனர். அவர்களுக்கு மத்தியில் மொழியால் மதத்தால் வேறுபட்ட போதும் உணர்வால் ஒன்றுபட்டு இவர்கள் வந்தமை பலரதும் பாராட்டைப் பெற்றது.

பெண்களின் திறமைகளை வெளிப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகள் அங்கே இடம்பெற்றன. வீதி நாடகம், பாட்டு, வெளியீடு என்று எதைப் பார்ப்பது, எதை விடுவது என்ற சங்கட நிலை.

பகல் சாப்பாடு எல்லோரும் ஒன்றாய் உண்ட விதமே அலாதியானது.

இதற்கிடையில் மரீனா சமூர்த்திச் சகோதரிகள் பலரை அங்கே கண்டுகொண்டாள். அதுபோக இன்னும் பல புதுத் தோழிகளையும் சம்பாதித்து விட்டாள்.

அம்ரிதா ரீச்சர் இடையிடையே தேவைகள் தொடர்பாக சகலரையும் விசாரித்துக் கொண்டார்.

"எப்பிடி மெடம் ஞாபகமிருக்கா?"

ஃபர்வீனா தனது விரிவுரையாளர் ஒருவரை அங்கே இனம்கண்டு ·பூரிப்படைந்தாள்.

"தொடர்ந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுங்கள். சமூகத்தில் பெண்கள் மத்தியில் நிறைய வேலை செய்ய வேண்டும். நாங்கள் கௌரவப் பிரஜைகளல்ல. சேவை செய்யப் பிறந்தவர்கள்" என்று தைரியமூட்டினார்.

பின்நேரம் இடம்பெற்ற கருத்தரங்கு அனைவருக்குமே இன்ப அதிர்ச்சியாய் அமைந்தது. கிணற்றுத் தவளைகளாக இவ்வளவு காலமும் இருந்து விட்டோமே என்று ஆதங்கப்பட்டனர்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைப்பிலே மிக அருமையாக விளக்கவுரை செய்தனர். பொருத்தமான வள அணியினர் என்பதை நிரூபித்தனர்.

"நாங்கள் இளைய நெஞ்சங்கள். எந்தப் பிரச்சினை வந்தாலும் பின்வாங்கக் கூடாது."

இறுதிக் கட்டமாகும் போது எல்லோரும் இந்த உணர்வினை இதயத்தில் ஏந்தி நின்றனர்.

'இந்த உணர்வோடு ஊருக்கு நாலு பேர் இருந்தாலே போதும். அவர்களால் சாதிக்க முடியாதது எதுவுமிருக்காது' அம்ரிதா ரீச்சர் தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

வெறுமையாகச் சென்று, இனி இல்லையென்ற அளவுக்கு நிரம்பியவர்களாக அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர்.

கடற்கரைக் காற்று ஜன்னலுக்குள்ளால் புகுந்து எல்லோரையும் அரவணைத்துக் கொண்டிருந்தது.

# 10.

**வா**சற்படியில் மரீனாவைக் கண்டபோது சப்பென்று போய் விட்டது ஸித்தி தாத்தாவுக்கு.

மகளைப் படுகுழியில் வீழ்த்த மரீனா திட்டமிட்டுச் சதி செய்வதாக அவளது உள்ளுணர்வு சொல்லிக் கொண்டிருந்தது.

"எங்கியன் ஃபர்வீனா?"

மரீனாவின் கேள்விக்கு வாய்திறந்து பதில் சொல்லாமல் அறைப் பக்கமாகக் கைநீட்டிக் காட்டி விட்டாள் ஸித்தி தாத்தா.

"மரீனாவா வா வா" என்று வாய்நிறைய வரவேற்றாள் ஃபர்வீனா.

மரீனா மகிழ்ச்சியோடு அருகமர்ந்தாள்.

மகளிர் தின வைபவத்தில் கலந்து கொண்ட பின்பு ஓர் உற்சாகம் எல்லோருக்கும்தான் ஏற்பட்டிருந்தது.

அம்ரிதா ரீச்சரின் பின்னணி அவர்களுக்குப் பெரும் வரப் பிரசாதமாக அமைந்திருந்தது. அவளது புலமையும் தொடர்பாடல் திறமையும் சமூக நலனுக்குக் கைகொடுக்கும் பெரிய சாதக நிலைதான்.

“டுவர் போறெண்டு சென்னவங்க பெய்த்திட்டு வந்தாப் பொறகு பேச்சி மூச்சில்ல” ஃபர்வீனா ஆச்சரியப்பட்டாள்.

“ம்... கெட்டுக் கெட்டா எங்களுக்கு சல்லி கெடக்கியாம். அதுதானாம் நாங்க இப்பிடிக் கூத்தாடிய” மரீனா சிரித்துக் கொண்டே சொன்னாள்.

இந்தச் சிலநாட்களாக மரீனாவும் ஃபர்வீனாவும் கச்சேரி உள்ளிட்ட பல இடங்களுக்கு அடிக்கடி போய் வந்தார்கள். நிர்வாகத் துறைசார் முக்கியஸ்தர்களை சந்தித்து வந்தார்கள்.

கிராம அபிவிருத்தி தொடர்பான முக்கியமானதொரு செயற் றிட்டத்தை தயாரிக்க வேண்டிய பொறுப்பில் அவர்கள் ஈடுபட்டனர். அதனூடாக சில வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியைப் பெறலாமென உறுதியாகியிருந்தது.

உத்தியோகபூர்வமான புள்ளி விபரங்களை சேகரிக்க வேண்டியிருந்தது. சிரமப்பட்டாயினும் அதனை தன் பணியாக மேற்கொண்டிருந்தாள் ஃபர்வீனா. வீட்டோடு இருப்பதால் அதனை ஆறுதலாகச் செய்ய அவளால் முடிந்தது.

மரீனா காரியாலய வேலைகளோடு அடிக்கடி ஃபர்வீனாவின் முன்னே பிரசன்னமாகி கலந்துரையாடுவாள். உற்சாகமூட்டுவாள். சக நண்பிகளின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வாள்.

"சரி நான் பெய்த்திட்டு வாரனே" விடைபெற்று வெளியிறங்கினாள் மரீனா.

அவளது தலை மறையும்வரை பார்த்திருந்த ஸித்தி தாத்தாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

"இவள் எனத்துக்கன் ஒரே வார போற... எனக்கென்டால் காட்டேல. பெரிய படிப்பு படிச்சீந்தா ஊர மறுகை பெரட்டியொண்டும்" வெறுப்பைக் கக்கினாள் ஸித்தி தாத்தா.

"ஏத்துக்கன் உம்மா நீங்க அப்பிடிச் செல்லிய. அவள் மனிசருக்கா எவளவு கஷ்டப்படுகியன்"

"ஓ... செல்லியாங்க செல்லியாங்க. பகா எடுத்துக் கொண்டு வேல செய்தாம். அத மறக்கியத்துக்கு ஒவ்வொரு கூத்துக் காட்டியாம். ஊட்டுக்குள்ள நின்டத்துக்கு இதியள் கேக்கியல்ல. நாலெடுத்துக்கு பெய்த்துப் பாக்கோணும்"

உம்மாவையும் ஒரு சாதாரண கிராமத்துப் பெண்ணாகப் பார்த்து அவள் பொறுத்துப் போனாள்.

"நான் தாருக்கட்டச் செல்லவன்" என்றவள் அதற்கு மேல் கதை கொடுக்காமலோ என்னவோ உள்ளே போய்விட்டாள்.

ஃபர்வீனா தன் எழுத்து வேலையைத் தொடர்ந்தாள்.

## 11.

**கோ**ழிப்பண்ணை ஆரம்பித்தவர்களுக்கு நல்ல வருமானம் கிட்டிக்கொண்டிருந்தது. சுகாதார மருத்துவ உதவியும் மேற் பார்வையும் கிட்டுவதால் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை.

''கொஞ்ச நாளேல கோழிக்குஞ்செல்லம் செத்துப் பெய்த்திரும்''

இப்படிச் சொன்னவர்களெல்லாம் மூக்கில் விரல் வைத்தனர். எங்களுக்கு இந்த வாய்ப்பு கிட்டவில்லையே என்ற காழ்ப்புணர்ச்சி பலவிதங்களில் வெளிப்பட ஆரம்பித்திருந்தது.

கொஞ்சம் பேர் கையொப்பமிட்டு ஒரு எதிர்ப்புக் கடிதத்தை எழுதியிருந்தனர்.

சரியான முறையில் பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்பட வில்லை. தங்களுக்கு வேண்டியவர்களுக்கு கிடைக்கும்

வகையில் பொய்த் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. பலரிடம் பணம் பெற்றுக்கொண்டு செயற்பட்டுள்ளனர். உடன் இதனை விசாரித்து உண்மையை அறியவும்.

இதுதான் அக்கடிதத்தின் சாரம்.

இதனை மேலதிகாரி நீட்டியபோது மரீனா திணறிப் போனாள். இவ்வளவு நேர்மையாகச் செய்த எனக்கா இந்த அவப்பெயர் என்று ஏங்கினாள்.

"உங்கட பகுதியிலிருந்துதான் இப்படியான பிரச்சினை வந்திருக்கு" அவர் மேலும் வலியுறுத்தினார்.

"நீங்க ஒரு பரிசீலன நடாத்தி உண்மய அறியிறது நல்லது ஸேர்" தன்னை நிதானப்படுத்திக் கொண்டு அவள் இப்படிச் சொன்னாள்.

மேலதிகாரி சிரித்தார்.

"எனக்குத் தெரீம். இதில எந்த உண்மயுமில்ல. இருந்தாலும் ஒழுங்கு மொறப்படி செய்வோம்."

அடுத்த சில நாட்களில் விசாரணைக்காக வந்திருந்தனர். வீடு வீடாகச் சென்று விபரப் படிவங்களைச் சரி பார்த்து அறிக்கை சமர்பித்திருந்தனர்.

"சமூர்த்தி மரீனாவுக்கு ஊட்டுக்குத்தான் பொகவாகும்."

ஊரெல்லாம் இந்தக் கதை பரவியிருந்தது.

ஜெமீல் நானா துடித்து விழுந்து கொண்டு ஓடிவந்தார்.

“அளவுக்கு மிச்சம் வேல செய்யப் போனா இதுதான் கரச்சல். எடுக்கிய சம்பளத்துக்கு வேல செஞ்சாச் சரியேன். ஊரத் திருத்த எங்களுக்கேலுமா. இதுக்குப் பொறகாலும் புத்தியா நடந்துக்கோங்கொ மகள்.”

“பொறாமக் காரணியள்ட கூத்த நம்பவாணா வாப்பா. நான் புத்தியாத்தான் நடக்கிய” இப்படிச் சொல்லிவிட்டு தன்பாட்டில் போய்விட்டாள் மரீனா.

துரதிர்ஷ்டவசமாக அன்று ஒரு கல்யாண வீடு.

கல்யாண வீடென்றால் சாப்பாடு முடியும்வரை ஊர்கதை களின் திறந்தவெளி அரங்காயிற்றே.

பிரதம மத்திச்சம் மொமஸாதிக்ஹாஜி நேர காலத்தோடு பிரசன்னமாகியிருந்தார். கடைகள், காணிகளென்று பெரிய வசதி காரன். பள்ளித் தலைவர். எல்லாவற்றுக்கும் மேலாக, ஊருக்கு நானே ராஜா என்ற நினைப்போடு வாழ்பவர்.

அவரைச் சூழ்ந்து எப்பொழுதுமே ஒரு கூட்டம் வலம் வந்து கொண்டிருக்கும்.

“ம்... கோழிக்குஞ்சி கரச்சல் முடிஞ்சா?”

முதலில் எல்லோரும் சிரித்து அவரது பேச்சுக்கு ஒரு அங்கீகாரம் வழங்கினர்.

“கோழிக்குஞ்சிக் கரச்சல் மட்டுமல்ல ஹாஜியார் ஒவ்வொரு ஜாதிய தொடங்கியாங்க. நெனச்ச மூப்பில செஞ்சிக்கொணு போறாங்க. ஊருக்கு பெரியவங்கள மதிக்கியல்ல” ஒருவர் எண்ணெய் வார்த்தார்.

"பொம்புளயளட கூத்து எத்தின நாளக்கன். உட்டுப் பாக்கிய... அளவுக்கு மிஞ்சிப் போனா நாங்க கண்ணப் பொத்திக் கொண்டு நிக்கியா"

மீண்டும் ஒருமுறை எல்லோரும் தலையாட்டினர்.

"ஊருக்கூரு போறாமென்டும் கேள்வி" இன்னொரு குரல்.

"மெய்யா... இவளியளுக்கு உம்ம வாப்பில்லயா? ம்... அந்த சமூர்த்திக் குட்டி தாரட மகளன்?"

"தெரியவா பள்ளத்து ரோட்டு ஜெமீல் நான"

"ஆ... அந்த ஜெமீலா"

"ஓ... ஓ..."

"நாளக்கந்திக்கி ஜெமீலுக்கு என்ன வந்து அம்புடச் செல்லோணும்... தாரன் செல்லிய... ஆ... இது ஜெஸாயிரு நிக்கிய"

"நான் செல்லியன் ஹாஜியார்"

"செல்லியல்ல... கையோட ஆளக்கூட்டிக் கொண்டு வரோணும்... சரியா..."

"சரி"

சீன வெடிகள் வெடிக்கத் தொடங்கின.

"மாப்பிள வார மாப்பிள வார"

வேறு பராக்கு தொடங்கி விட்டது.

# 12.

“ஜெமீல் நானா ஒங்கள கட்டாயம் மொமஸாதிக் ஹாஜி வரச்சென்ன”

ஜெஸாயிர் சொல்லிச் சென்ற செய்தி ஜெமீல் நானாவின் மனதுக்குள் உருண்டு புரண்ட வண்ணமிருந்தது.

பெரிய மத்திச்சம் சும்மா சொல்ல மாட்டார் என்பது மாத்திரம் உறுதி. மகளின் நடவடிக்கைகள் பெரும்பாலும் அவருக்கு பிடித்துக் கொண்டிருக்காது. எனவே அது தொடர்பாகக் கேட்கத் தான் அழைத்திருக்கலாமென்று ஊகித்தார்.

போகாமலிருக்கவும் முடியவில்லை. போய்ப் பதில் சொல்லவும் தெரியவில்லை அவருக்கு.

“செய்னம்பு... எனத்துக்கோ தெரிய. பெரிய ஹாஜியார் வரச்செல்லி அனுப்பீக்கி.”

மனைவியோடு கலந்துரையாடலை ஆரம்பித்தார் ஜெமீல் நானா.

“பெய்த்துத்தான் பாக்கோணும். எனக்கென்டா ஒன்றும் வெளங்கல்ல. நானும் அங்க போன வந்த காலம் நெனவில்ல... போனா ஹாஜுூம்மவேம் பாத்திட்டு வரேலுமேன்”

அவருக்கும் உற்சாகம் கிளர்ந்து விட்டது. மனைவியோடு போவது ஒரு தைரியந்தானே!

“அப்ப மஃரிபு தொழுதிட்டு போம்” புளகாங்கிதத்தோடு சொன்னார்.

“இன்ஷா அல்லா”

பெரிய ஹாஜியென்றால் கேட்கத் தேவையில்லை. பரம்பரைப் பணக்காரர்தான். திஸ்ஸமகாராமயிலுள்ள வயலும் கிரமயிலுள்ள பங்கிளித் தோட்டமும் பரம்பரைக்கே காணுமென்று சொல்வார்கள்.

அவரது உம்மாவும் வாப்பாவும் தண்ணீர்க் கப்பலில் மக்காவுக்குப் போய்வந்தவர்கள். வருடம் தவறாமல் ஊரைக் கூட்டிக் கந்தூரி கொடுப்பார்கள்.

மஃரிபு தொழுதுவிட்டு டோச்சும் கையுமாக ஜோடு போட்டுக் கொண்டு போகத் தயாராகி விட்டார்கள்.

“ஆ ரெண்டு பேரும் மாமியூட்டுக்கு பொகப் போறா?” மரீனாதான் கேட்டாள்.

“இல்ல மகள்... பெரிய ஹாஜி வரச்செல்லியனுப்பீக்கி. எனான்டு கேட்டிட்டு வர...”

ஹாஜி வீட்டில் இருவருக்கும் வரவேற்பு பிரமாதமாக இல்லா விட்டாலும் எதிர்பார்ப்பு வெளிப்பட்டது.

“ஆ... வா வா ஜெமீல்”

“ஆ... இவக்கும் வழிதொறபட்டீக்கி” ஹாஜும்மா மகிழ்ந்து வரவேற்றார்.

“ஓ... ஒங்கள மிச்ச நாளாக் காணல்ல. பாத்திட்டுப் பொக வென்டு வந்த. எனத்தியன் சொகமா ஈக்கியா...?”

“இரீங்கொ இரீங்கொ”

முன்சாலையில் ஹாஜி சாய்கதிரையில் அமர்ந்திருந்தார். ஜெமீல் நானா அவருக்கு எதிரே அமர்ந்து கொண்டார்.

“எனத்தியென்டா ஜெமீல். ஊரில நாங்க மானம் மருவாரியா ஈக்கோணும். ஊரட பொறுப்ப அல்லாத்தாலா நாயன் ஏன்ட கைல தந்தீக்கியான். ஊரு விஷயங்கள ஒழுங்கான மொறக்கி பாக்கக் கேக்காட்டி நாளக்கி எனக்கிட்ட கேள்வி கணக்கீக்கி... அப்பிடித்தானே”

“ஓ... ஓ... ஹாஜியார்”

“பொம்புளகளட வேலவெட்டீல நாங்க மிச்சம் கவனமா நடந்து கொளோணும். இது மிச்சம் பொல்லாத காலம்... மூத்த மனிசரு ஆலிம் உலமாக்கள் செல்லியத்த இந்தக் காலத்து மனிசரு கேக்கியல்லேன். பொய்யா நான் செல்லியது”

“ம்... ம்...”

“ஓன்ட மகளப் பத்தி எந்த நாளும் ஒவ்வொத்தரு வந்து செல்லிய... இந்த மனிசரு பொறாம ஹஸதிலேம் செல்லியேன்... ம்... அப்பிடி எனத்த சரி கொறகுத்தமீந்தா செல்லிப் பேசி மகள சரி பண்ணிக்கோ”

“மெய்தான் மெய்தான்”

“மகளுக்கு இப்ப எத்தின வருஷமன். கலியாணம் புடிச்சிக் குடுக்கிய வயஸாகீக்கும்” இது ஹாஜும்மாவின் வினவல்.

“ம்... இப்ப இருவத்தஞ்சி பொறக்கிய. இனி அல்லாட நஸீபும் வரோனேன்” ஜெமீல் நானா வாய் போடமுன் செய்னம்பு முன்னே பாய்ந்து சொல்லிவிட்டாள்.

சுடச்சுட இஞ்சிக் கோப்பி வந்தது.

விடை பெறும்போது இஷாவுக்கு பாங்கு சொல்வது கேட்டது.

“புத்தி யோசினயா நடந்துக்கோங்கொ. அன்ன செல்லல்ல யெண்டு செல்லாம”

புத்திமதியும் எச்சரிக்கையுமாக விடை கொடுத்தார் மொமஸாதிக் ஹாஜி.

இருவரும் மௌனமாக நடந்து கொண்டிருந்தார்கள். இந்த மிரட்டல்களெல்லாம் மரீனாவின் பார்வையில் வெறும் தூசுதான்.

# 13.

மணப்பெண்களுக்கு முடியலங்காரம் செய்யும் முறைகள் பற்றிய செய்முறை வகுப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

பாடசாலை அதிபரை ஆரம்பித்து வைக்குமாறு மாதர் சங்கம் கேட்டிருந்தது.

அதை ஏற்றுக்கொண்ட அதிபர் குறித்த நேரம் கடந்தும் வருகை தராமை மரீனாவின் தலையைக் குழப்பிக் கொண்டிருந்தது. உடனடியாக மாற்று நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்தாள்.

செய்முறை விரிவுரையாளர் தனது மனைவியோடு வருகை தந்திருந்தார்.

பயிற்சி வகுப்புக்கு பதினைந்து யுவதிகள் வருகை தந்திருந்தனர்.

ஃபர்வீனா நிகழ்ச்சியை ஆரம்பித்து உரையாற்றினாள்.

வகுப்பு ஆரம்பித்தது. தனது மனைவியின் முடியை பல்வேறு மோஸ்தர்களில் வடிவமைத்துக் காட்டினார்.

பின்னர் பங்கு பற்றியோரை சோடிகளாகப் பிரித்து பயிற்சியை மேற்கொண்டார்.

மரீனாவும் றம்ஸியாவும் பாடசாலை வாயிலில் நின்றனர்.

எதற்காகவோ அப்பகுதிக்கு வந்த ஜெஸாயிரும் அப்பாஸும் உள்ளே பிரவேசிக்க முடியாமல் தவித்தனர். எட்டியெட்டிப் பார்த்தனர்.

"சிங்களவனியள்க் கூட்டிக் கொணு வந்து கூத்தாடிய"

இவர்களது காதில் விழத்தக்கதாகக் கூறிவிட்டு இருவரும் போய்விட்டனர்.

றம்ஸியா வெருண்டு போய் மரீனாவைப் பார்த்தாள்.

"சென்னது கேட்டா?"

"கேட்ட... வரச்செல்லே நான் நெனச்ச"

"ரெண்டு பேரும் ஆக மோசமானவனியள்"

இதற்கிடையில் இம்திஸாம் அங்கே வந்து சேர்ந்தான். இருவரதும் நெஞ்சு நிமிர்ந்தது.

மெரீனா ஆள்விட்டு வரவழைத்த விஷயம் றம்ஸியாவுக்கும் இன்னும் தெரியாது.

"இன்டக்கி எனத்தியன் நடக்கிய?"

விபரங்களை இருவரும் எடுத்துக் கூறினர்.

இம்திஸாம் மக்கள் வங்கியில் கடமையாற்றுபவர். ஊரில் பலரதும் மதிப்பைப் பெற்று வருபவர். சமகாலத்தில் ஒன்றாகப் படித்தவர்.

அப்போது இரண்டு மூன்று சைக்கிள்கள் அப்பக்கமாக வந்தன. எல்லாமே தொடர்ச்சியாக மணியடித்தபடியே வந்தன. பாதையில் போவோர் வருவோரின் கவனத்தைத் திசை திரும்பும் உத்தி போலும்.

அங்கு இம்திஸாமைக் கண்டதும் அவர்களுக்கு எதிர்பாராத அதிர்ச்சி.

"எனத்தியன் எல்லாரும் இங்கள?" சிநேகபூர்வமாக இம்திஸாம் கேட்டான்.

என்ன சொல்வதென்று தெரியாமல் திக்குமுக்காடினர்.

"கொழப்பம் செய்ய வந்தா செஞ்சிட்டுப் போங்கொ" அடுத்த வசனம் சற்று சூடாக வெளிவந்தது.

"இல்ல இல்ல அப்பிடியொன்டுமில்ல. ஜெஸாயிரும் அப்பாஸும் தான் எங்கள அனுப்பின. நாங்க சந்தீல கதச்சிக்கோ நின்ட... மோசமான பேச்செல்லாம் அங்க பேசியாங்க" தடுமாறிய படி ஒருவன் சொல்லித் தீர்த்தான்.

"நான் பாத்துக்கோ நிக்கியென்டு ரெண்டு பேரேம் வரச் செல்லுங்கொ" அதட்டலாகச் சொன்னான்.

இதுதான் சந்தர்ப்பமென்று எல்லோரும் வந்த வழியே திரும்பி விட்டார்கள்.

மீண்டும் கேற்றடிக்கு மரீனாவும் றம்ஸியாவும் வந்தனர்.

“பிரின்ஸிபல் வாரென்டு செல்லீட்டு வரல்ல. எனசரி கரச்ச லொண்டீக்கென்டு எனக்கு வெளங்கீட்ட. அதுதான் டக்கென்டு ஒங்களுக்கு செய்தி அனுப்பின.”

“மெய்யா... அப்ப புத்தியப் பாவிச்சீக்கி” றம்ஸியா ஆச்சரியப் பட்டாள்.

நல்லதொரு நோக்கத்திற்கு எதிராக அதிபரின் சின்னத்தனமான சார்பு நிலையை அவர்களால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

“சீ... இப்பிடி நடந்து கொளப்படாது. அந்நிய ஜாதி வந்தீக்கச் செல்லே எல்லாரடேம் மானம் போறேன்” றம்ஸியா கோபத்தோடு கத்தினாள்.

“எல்லாவெடத்திலேம் இவங்கட அட்டகாசம் கூடிக்கொணு போகுது. பாத்துப் பாத்தீந்து சரிவராது” இம்திஸாம் கருவிக் கொண்டான்.

வகுப்பு முடியும் நேரம் நெருங்கியது.

“வாங்க தேத்தண்ணி குடிக்கோம்”

மூவரும் உள்ளே நடந்தனர்.

இதற்கான எதிர்வினை பற்றி தனக்குள் தீவிரமாக யோசித்தபடியே நடந்தான் இம்திஸாம்.

# 14.

மாதர் முன்னேற்றச் சங்கம் அடுத்தடுத்து மேற்கொண்ட சகல நடவடிக்கைகளும் வெற்றியளித்து பெயர்ப் பதிவை ஏற்படுத்தி வந்த நிலையில் நேற்றைய மணப்பெண் அலங்கார வகுப்பு குழம்பிப் போனது சம்பந்தப்பட்டவர்களுக்கு பெரும் கவலையளித்தாலும் இன்னுமொரு சாராருக்கு வெற்றியின் முதற்கட்டமாகவே அமைந்து விட்டது.

“ஆ... வாங்கொ வாங்கொ” மொமஸாதிக் ஹாஜி சகபாடிகளை வரவேற்றார்.

அவர் வீட்டு முன்வாசலில் மத்திச்சம்மார் பாடசாலை அதிபர் போன்றோர் அமர்ந்திருந்தனர். அதிபரின் வரவோடு முக்கிய தலைகள் ஒன்று சேர்ந்துவிட்டன.

“எங்கியன் ஜெஸாயிரக் காணல்ல”

எடுபிடியாக இருந்தாலும் ஜெஸாயிரின் சேவையும் அங்கு தேவையாக இருந்தது போலும்.

"அவன் வார டைமுக்கு வரட்டும். நாங்க பேசோம்" இரண்டாம் மத்திச்சம் குரல் கொடுத்தார்.

கலந்துரையாடல் களைகட்டியது.

"நாங்க ஸெட் பண்ணின மாதிரி எல்லாம் ஒழுங்கா நடந்த. அதுக்கெடேல அந்தப் பொடியன் இம்திஸாம் எங்கீந்து வந்தோ தெரிய... எங்கடாள்கள் வழிபாக்கல்லேன்... பயந்திட்டானியள்."

"ஆ... இனியினி" பெரிய ஹாஜி வாயைப் பிளந்தபடி நின்றார்.

"எங்களுக்கு ஒன்டும் தெரிய. ஜெஸாயிரும் அப்பாஸும்தான் அனுப்பினென்டு செல்லீட்டு வந்திட்டானியள்... இல்லாட்டி நல்லோரு கேம் குடுக்கீந்து" அதிபரின் ஆதங்கம் அனைவர்க்கும் புரிந்தது.

"அதுசரி தாரன் அந்தப் பொடியன்" பெரிய ஹாஜியின் கேள்வி இது.

"அவனத் தெரீமா ஒங்களுக்கு. மலே வளவு மைமூனாச்சி யாட பேரன். வாப்பக்காரன் காலீ மனிசனொான்டு"

"ஆ சரி சரி அவன் எங்கியோ களிசம் உடுத்துடுத்துப் போற எந்த நாளும்"

"பேங்கில வேல. நல்ல படிப்பாளியாம்"

" சரி நான் கேக்கிய அவனெப்பிடியன் அவடத்துக்கு வந்த...?"

"அதுதான் ஹாஜியார் எங்களுக்கும் தெரியாத... ஆனா ஒன்டு அவனுக்கும் அந்தக் குட்டியளுக்கும் கெனக்ஷன் ஈக்கோணும்..."

"இத உடப்படாது தேடோணும். பொம்புளச் சங்கத்தில பொடியன்மாருக்கு எனத்தியன் வேல... இதியளுக்கு எடமுட்டா பொகப்பொக பஸாதுதான் நடக்கும்" ஹாஜியின் முகத்தில் கோபம் கொப்பளித்து நின்றது.

"மூனுபேருதான் இதில பெரிய கெப்டன்மாரு. ஒன்டு சமூர்த்திக் குட்டி... மத்தது கெம்பஸ் ஃபர்வீனாம் அம்ரிதா ரீச்சரும்... இவங்க ஒவ்வொத்தரா எப்பிடிச்சரி கழட்டினா எல்லம் சரி. வெளங்கினா..." அதிபர் மெயின் ஸுவிச்சில் கைவைத்தார்.

அதனை மூளையில் சுழலவிட்டவர்களாக கேக் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

கேக் இனித்ததோ இல்லையோ இனி மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளை நினைத்தபோது மனசு இனித்தது போலும்!

# 15.

நடைபெற்று முடிந்த நிகழ்ச்சியை இரை மீட்டிப் பார்த்த போது இம்திஸாமுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

இதை அப்படியே விட்டு விடுவதா அல்லது ஏதும் பதில் நடவடிக்கை மேற்கொள்வதா என்று முடிவுக்கு வரமுடியவில்லை. எதற்கும் சக நண்பர்களோடு கலந்துரையாடுவதே நல்லது போல் பட்டது.

சமூர்த்தி மரீனா, அம்ரிதா ரீச்சர், கெம்பஸ் ஃபர்வீனா போன்றவர்களின் முகங்கள் தோன்றி ஆயிரம் கதைகள் கூறின.

இவர்களின் நடவடிக்கைகளில் எந்தச் சுயநலமும் இருப்ப தாகத் தெரியவில்லை. சுதந்திரமாகவும் அந்தஸ்துடனுமிருக்கும் இளமைக் காலத்தில், நல்லது செய்து நான்கு பேரை அவ் வழியில் பயணிக்க வைக்கும் நோக்கம் ஏன் சிலருக்கு பிடிக்கவில்லையென்பது அவனுக்குப் புரியவில்லை.

இம்திஸாம் நேரகாலத்தோடு மஃரிபு தொழுகைக்குச் சென்றான். எதிர்பார்த்தது போல் பாரிஸ், ரிபாய் போன்றவர்களை சந்திக்க முடிந்தது. அவர்களது முகங்களிலும் இதன் எதிரொலி பதிவாகியிருந்தது.

தொழுது முடிந்ததும் இதுவே அவர்களது பேச்சாகி விட்டது.

“பிளேன்டீம் பீடியொன்டும் எடுத்துக் குடுத்தாப் போதும் இவனியளுக்கு. முந்தி இவனியளுக்கிட்டக் கேக்கோம்” பாரிஸ் அபிப்பிராயப்பட்டான்.

“காத மூடி ரெண்டு குடுத்திட்டுத்தான் கேக்கோணும்” ரிபாஸின் கைகள் துடிதுடித்தன.

மூவரும் மெல்ல மெல்ல கதைத்தபடியே நடந்து கொண்டிருந்தனர். இந்த விஷயம் ஊர்வாய்க்கு விருந்தாகவிருந்தது. நீதி நியாயம் விளங்கினாலும் அதுபற்றி வாய் திறக்காத நோய் எல்லோரையுந்தான் பீடித்திருந்தது. இதற்கான நிவாரணம் இலகுவில் கிட்டக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை.

ஜஸாயிரின் வீட்டு முற்றத்தில் மூவரும் கால்பதித்தனர். பூச்சிடப்படாத சுவர்கள். தகரக் கூரை. தனது வாழ்நிலையை வளம்படுத்திக் கொள்ளத் தெரியவில்லை. சும்மா வால் பிடித்து அற்பலாபம் பெறுவது அவனது தொழிலாகப் போயிருந்தது.

“ஜஸாயிர் நானா...” இம்திஸாம் மரியாதையாக அழைத்தான்.

“தாரன் ஆ... வாங்க வாங்க” என்றவாறே வெளியே வந்தார்.

“ஆ... ஒங்களத்தான் தேடிவந்த”

மூன்று முகங்களையும் கண்டதும் ஐஸாயிருக்கு எல்லாம் புரிந்திருக்க வேண்டும்.

“ஹாஜியாராங்களுக்கு வேலவெட்டி செஞ்சிதான் ஏன்ட காலம் போற... ம்... அவங்க சென்னா எனக்குச் செய்யாமீக் கேலுமா... மன்னிச்சுக்கோங்க தொர”

ஐஸாயிரின் பாணியே இப்படித்தான்.

“எந்தநாளும் இந்தக் கூத்து சரிவாரல்லயென்டு செல்லுங்கொ. நாங்களும் இந்தூரில பொறந்து வளந்தவங்கதான். பாத்துப் பாத்தீக்கிய பயத்துக்கல்ல. அடிதடியென்டா அதுக்கும் ரெடியென்டு செல்லுங்கொ”

இவ்வளவு கடும்போக்கில் இம்திஸாம் பேசியதை இதற்கு முன் அவன் பார்த்ததேயில்லை.

“சரி தொர நீங்க வந்தது நல்லம். நான் செல்லியன்... சத்தியமா தொர இதுக்குப் பொறகென்டா நான் இந்த ஜாதிக்குப் போறல்ல”

மூவரும் அங்கிருந்து திரும்பி நடந்தனர். அப்பாஸை தேடிப் போக வேண்டிய தேவை அற்றுப் போய்விட்டது.

# 16.

“மரீனா கோல்”

பிரதேச செயலகத்தில் வேறு கடமையில் ஈடுபட்டிருந்தபோது தான் இந்த அழைப்பு. யாராக இருக்குமென்று அவள் ஊகித்தாள். ஓரளவுக்கு எதிர்பார்த்ததும்தான்.

“ஹலோ ஆ... நான் மரீனா... ரீச்சர் செல்லுங்கொ”

“எங்கட புரொஜெக்ட் சம்பந்தமா சம்பந்தப்பட்டவங்களோட கதச்சன். பெரும்பாலும் ஓகேயாகும். ஃபிரி ஸ்கூல் புரோக்ராம் திட்டம் போட்ட மாதிரி நடக்கும். ஒழுங்குகளச் செய்ங்கொ”

மரீனாவுக்கு துள்ளிக் குதித்துக் கூத்தாட வேண்டும் போலிருந்தது. அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள குறைந்த பட்சம் ஒருவர்கூட அங்கிருக்கவில்லை. ரம்ஸியாவுக்கு இந்தத் தகவலை எப்படிக் கொடுப்பதென்று தடுமாறினாள்.

உருப்படியானதொரு பாலர் பாடசாலைகூட ஊரில் இல்லை. இது பற்றியதொரு சிறிய ஆய்வை றம்ஸியா மேற்கொண்டு விரிவான அறிக்கை தயாரித்திருந்தாள்.

ஆறு பாலர் பாடசாலைகள் அதற்கென்று கட்டிடங்கள் எதுவுமின்றி இயங்கிவந்தன.

''முன்பள்ளிக் கல்வி சம்பந்தமா ஏதாவது பயிற்சி பெத்தீங்களா...?''

பாலர் பாடசாலைகளில் கடமையாற்றும் பத்துக்கு மேற்பட்ட ஆசிரியைகளில் ஒருவர் கூட இதற்கு 'ஆம்' என்று சொல்ல வில்லையென்றால் பாருங்களேன். ஓ.எல், ஏ.எல். சித்தியைத் தவிர அவர்களுக்கு எந்தப் பயிற்சியுமே கிட்டியிருக்கவில்லை. கொஞ்ச வருமானத்துக்காகச் செய்கின்றதொரு தொழிலாகவே அது அமைந்திருந்தது.

"இதால ஒங்களுக்கு எவளவு வருமானம் கெடக்கியன்?"

ஒவ்வொரு பாடசாலையிலும் முப்பதுக்குக் குறையாத மாண வர்கள் காணப்பட்டனர். ஆனால் மாதாந்தம் மூவாயிரம் ரூபாய்கூட சம்பளமாகப் பெறுவது கஷ்டமாம்.

வீட்டுத் திண்ணைகளும் ஓலை மடுவங்களுமே வகுப்பறை களாகவிருந்தன.

பௌதிகவள உதவியும் ஆசிரிய பயிற்சியும் மாதர் முன்னேற் றச் சங்க ஏற்பாட்டில் வழங்கப்பட இருப்பதாக அறிவித்தபோது கிடைத்த வரவேற்பும் ஆர்வமும் அவர்களைத் திக்குமுக்காட வைத்துவிட்டது.

பெற்றோர்கள் கூட அடிக்கடி வந்து விசாரிக்கத் தலைப்பட்டு விட்டனர். அவர்கள் அத்தனை பேரும் மேற்கொண்ட ஆர்வ மூட்டலுக்கு சரியான பதில் கிட்டியிருந்தது.

ஐந்து முழுநாள் பயிற்சிக்கான அனுமதி கிடைத்திருந்தது. வளவாளர்கள் அழைக்கப்படவிருந்தனர். பயிற்சிக் கூடம் மற்றும் உணவு வசதிகள்தான் செய்துகொடுக்கப்பட வேண்டும்.

தகவல் கிட்டியதும் றம்ஸியா மரீனாவைத் தேடிக்கொண்டு பறந்து வந்திருந்தாள். அவளைத்தான் நிகழ்ச்சி இணைப் பாளராகவும் தெரிவு செய்திருந்தனர்.

"றம்ஸியா... ஒரு கெழமக்கி எல்லம் ஒங்கட பொறுப்புத்தான். நான் சும்ம பாக்க வருவன். ரீச்சருக்கும் வேற புரோக்கிராமீக்கி. மத்த எல்லா ஒழுங்கும் ஒங்களோடதான்"

றம்ஸியாவை முழுமையாகவே இதில் இறக்கிவிடும் நோக்கோடுதான் மரீனா அப்படிச் சொன்னாள் போலும்.

அவள் ஒன்றும் அதைக் கேட்டு அசந்து போய்விடுபவள் அல்ல. துணிச்சல் மிக்கவள்.

"வாரவங்கள நிபட்டத்தான் நல்ல எடம் பாக்கோணும். மத்ததெல்லாம் சின்ன வேல" அவள் ஒரேயடியாகச் சொல்லி விட்டாள்.

கொஞ்சம் சரிந்து கொண்டிருந்த செல்வாக்கு மீண்டும் ஓஹோவென்றுயர்ந்து கொடி கட்டிப் பறக்குமென்பதில் என்னதான் சந்தேகம்.

காற்று அவர்களுக்கு சாதகமாகத்தான் வீசிக் கொண்டிருந்தது.

## 17.

அன்று நேரகாலத்துடன் பாடசாலைக்கு வந்த அதிபர், அலுவலகத்தைத் திறந்து தொப்பென்று அமர்ந்து கொண்டார்.

மனச்சாட்சிக்கு மாறாக நடந்துகொள்ள வேண்டிய நிலைக்கு அவர் பலவந்தமாகத் தள்ளப்பட்டிருந்தார்.

சமூக வளர்ச்சியை கட்டியெழுப்ப வேண்டிய வகையில் செயலாற்ற வேண்டிய அவரது நடவடிக்கைகள் அம்பலத்துக்கு வந்திருந்தது.

பின்னணியிலிருந்து இயங்கி வந்த அவரது சுயரூபம் சில நாட்களுக்கு முன் நடைபெற்ற சம்பவத்தின் மூலம் பகிரங்கமாகி யிருந்தது.

மொமஸாதிக் ஹாஜியின் குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். அந்தத் தொடர்பாடலின் ஊடாக அதிபர் ஆசனத்தில் அமர்த்தப் பட்டவர். எப்படியோ கதிரை கிடைத்து விட்டது. இனியென்

றாலும் அதற்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டுமென்று நினைத்தது உண்மைதான்.

அதற்கு முடியாமல் போகவே மறைந்திருந்து எதிர்ச்செயற் பாடுகளில் இறங்கினார்.

எத்தனை நாளைக்கென்று அப்படிச் செய்வது?

அதுவும் அம்பலத்துக்கு வந்துவிட்டது. இனி வெளிப்படை யாகவே இயங்குவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

நேற்று நடைபெற்ற உள்வட்டக் கூட்டம் அவரை இன்னும் ஒரு குழப்புக் குழப்பி விட்டது.

மொமஸாதிக் ஹாஜி தலைமையில் மத்திச்சம்மார்கள் மற்றும் முக்கியஸ்தர்களெல்லாம் கலந்து கொண்டனர். இரண்டு மூன்று தலைமுறை முன்னோக்கிப் பார்த்தால் ஒரே குடும்பத்தி லிருந்து பல்கியவர்களே அவர்கள்.

பொது நிறுவனங்களிலும் பொது நிகழ்வுகளிலும் தாங்கள் முக்கியத்துவம் பெறவேண்டுமென்பதே அவர்கள் சொல்லாமல் சொல்லும் செய்தி.

மாணவர்களின் வரவும் கலகலப்பும் பாடசாலையில் ஆரம்பித்து விட்டது. அதற்கு மேல் அவரால் அங்கே குந்தியிருக்க முடியவில்லை.

இரண்டொரு ஆசிரியர்கள் வந்திருந்தனர். அம்ரிதா ரீச்சர் எப்போது வருவார் என்பதே அவரது எதிர்பார்ப்பாகவிருந்தது.

“குட் மோனிங்” என்றபடி அவர் வந்தபோது அதற்குப் பதில் சொல்லும் திராணி அவருக்கு இருக்கவில்லை.

“ரீச்சர் எங்களுக்கு பாடம். எங்களுக்கு டான்ஸ் பழக்கியென்டு சென்ன இன்டக்கி” நாலாம் தரப் பிள்ளைகள் மணியடிக்கு முன்பே வந்து அழைத்து நின்றனர்.

“ரீச்சர் வாறொன்டும் ஓடுங்க வகுப்புக்கு”

அதிபர் ஏன் பாய்ந்து விழுந்தாரென்று பிள்ளைகளுக்கோ ரீச்சருக்கோ விளங்கவில்லை.

“கொஞ்சம் இரீங்கொ. ஒங்களோட கதைக்கோணும்.”

அப்படியென்ன விசேடமென்று புரியாமல் அமர்ந்துவிட்டார். புதிதாக ஏதும் பொறுப்புக்களை சுமத்திவிடப் போகிறாரோ என்ற யோசனை அவளுக்கு.

“எனத்த ஸேர்”

“நீங்க படிச்சிக் குடுக்க வந்தா படிச்சிக் குடுங்கொ. ஊரு விஷயங்கள்ள தலபோட்டுக் கொண்டு திரியவாணம்”

ரீச்சர் இப்படியொன்றை எதிர்பார்க்கவேயில்லை. மாதர் சங்கம் தொடர்பாக நடைபெற்ற விடயங்கள் அவர் மனதிலே படுவேகமாக ஓடியது.

“பாடசாலை விஷயங்கள நான் ஒழுங்காச் செய்றன். ஊரு விஷயங்களில நான் தலபோடியதும் போடாமீக்கியதும் ஏன்ட சொந்த விருப்பம். அதில நீங்க தலபோட வாண”

முகத்தில அடித்தது போல் ரீச்சர் சொன்ன பதில் அதிபரை அதிர்வுக்குள்ளாக்கியது.

“நீங்க நெனச்ச மாதிரி இங்க நடக்கியென்டா ஸ்கூல விட்டிட்டுப் போங்கொ”

“ஸ்கூல விட்டிட்டு எனக்குப் போகத்தேவில்ல. நீங்க அனுப்பினா நான் போறன். ஸ்கூலுக்கு பஞ்சமில்ல எனக்கு” அடுத்த பதிலடி உயர்ந்த ஸ்தாயியில் வெளிப்பட்டது.

இதற்கிடையில் என்னவோ ஏதோவென்று பல ஆசிரியர்கள் அங்கே ஓடிவந்து விட்டார்கள்.

ரீச்சர் இவ்வளவு கடுமையாகக் கதைத்ததை அவர்கள் அன்றுதான் பார்த்தார்கள். அதிபர் முகத்தில் இருள் அப்பிக் கிடந்தது.

“எனத்தியன் ஸேர்”

“எங்கீந்தோ வந்துக்கொண்டு ஒவ்வொத்தரும் நெனச்ச கூத்தப்போட இங்க எடங்குடுக்கேல. ஊருக்கொரு மொறயீக்கி”

வந்தவர்களை தன்பக்கமாக்கிக் கொண்டு கதைத்தார் அதிபர்.

எந்தப் பக்கம் சார்ந்து நிற்பதென்றோ, நீதி நியாயம் என்ன வொன்றோ அவர்களுக்குப் புரிந்தாலும் புரியாவிட்டாலும் வழமை போல் மௌனமாக இருந்து விட்டனர்.

அவர்களும் அந்த மண்ணில் பிறந்தவர்களல்லவா!

ரீச்சர் நேரே வகுப்புக்குச் சென்று தன் பாடத்தை ஆரம்பித்தார்.

# 18.

அம்ரிதா ரீச்சருக்கு ஏற்பட்ட அதட்டலை கேள்வி யுற்றதிலிருந்து ஃபர்வீனாவுக்கு ஒருவித பதற்றமாக இருந்தது. தனது கடமைக்குப் பங்கமில்லாத வகையில் செயற்படும் ஒரு வருக்கு இவ்வளவு பிரச்சினையா?

காலப்போக்கில் பிரச்சினைகள் என்னென்ன முகமெடுக்கு மென்று எண்ணிப் பார்த்தாள். என்ன தான் படித்துப் பட்டம் பெற்றாலும் மரீனாவுக்கிருக்கும் அசாதாரண துணிச்சல் அவளுக் கில்லைதான்.

“மகள் இன்டக்கி மாப்பிளூட்டாரு வாரெண்டு செல்லீக்கி”

உம்மா போட்ட குண்டு அவளுக்கு எல்லாவற்றையும் மறக் கடிக்கச் செய்துவிட்டது.

அவளை அறியாமலேயே இவ்வளவு ஏற்பாடுகளையும் செய்து முடித்துள்ளார்களா?

“எனத்தியனும்மா நீங்க செல்லிய?”

“படிச்சி முடியங்காட்டீம்தான் பாத்துக்கோ நிண்ட. கலியாணம் முடியங்காட்டீம் எங்களுக்கு நிம்மதில்லேன் மகள்.”

தாய் என்ற நிலைப்பாட்டில் அந்தக் கூற்று நியாயம்தான்.

மாப்பிள்ளை யார்... எவர்...? என்ற கேள்வி அவளுக்குள் குதியாட்டமாடியது. இவ்வளவு சீக்கிரமாக இந்த முயற்சியில் வாப்பா இறங்கி விடுவாரென்று அவள் நினைக்கவில்லை.

“நல்ல எடந்தான் மகள். எங்களுக்கு கிட்டவாகேண்டிய எடமல்ல. அல்லா மொகம் பாத்தீக்கி. பெரிய படிப்புப் படிச்சத்தில சரி வந்த. மொமஸாதிக் ஹாஜீட சாச்சாட மகன்ட மகனேன். தெரியவா பஜாரில பொடவக்கட போட்டீக்கி.”

உம்மா சொல்லிக் கொண்டு போகப் போக தொலைக்காட்சி போல் காட்சியோடி கதாநாயகனைக் கண்டுபிடித்து விட்டாள்.

படிப்பாளியல்ல; ஆனால் ஆள் வாட்டசாட்டமான பேர்வழி. நீதி, நேர்மையைக் கொஞ்சம் மறந்து விட்டு வசதி வாய்ப்பென்று பார்த்தால் அதற்கு மேல் ஊருக்குள் தேட முடியாதுதான்.

ஃபர்வீனாவுக்கு பசி தாகம் அற்றுப் போய்விட்டது. அர்த்த முள்ள வாழ்க்கையை நோக்கிப் பதிந்த சுவடுகள் மீண்டும் பின்னோக்கி நகரத் தொடங்கியது.

புதிய முகாம் அவளை இராஜ மரியாதையோடு வரவேற்றுக் கொண்டிருந்தது.

மாலையாகும் போது அவள் தன்னை இலேசாக அலங்கரித்துக் கொண்டாள்.

இது சம்பிரதாயபூர்வமான முதற் பார்வை என்பதால் பெரிய தடபுடல்கள் இருக்கவில்லை.

மஃரிபு படிப்படியாக இருளுக்குள் மூழ்கும் போது வெள்ளை வேனொன்னு வந்து நின்றது. நாளைந்து பெண்கள் இறங்கி வந்தனர்.

உம்மா வரவேற்க ஃபர்வீனாவும் சிரித்து அங்கீகரித்தாள்.

ஆண்களென்று ஒரேயொருவர்தான். வாப்பா அவரோடு கதைத்துக் கொண்டிருந்தார்.

எல்லோரும் ஒருவரையொருவர் முன்பின் தெரிந்தவர்கள். பழக்கத் தொடர்பு பெரிதாக இருக்கவில்லை.

வசதி படைத்த பெரிய குடும்பங்கள் படித்த அழகிய பெண்களை தேடிப் பிடிக்கின்ற வரிசையில் அவளும் அகப்பட்டிருந்தாள்.

தேநீர் உபசாரங்களோடு சந்தோஷமாக மாலை போடும் நாள் குறித்துவிட்டுச் சென்றபோதுதான் எல்லோருக்கும் உறுதியும் நிம்மதியும் ஏற்பட்டது.

"கைராயீக்கும்... இனி அவங்கட மானம் மருவாரிய நாங்க பாதுகாத்துக் கொளோணும்" வாப்பா ஒரே வார்த்தையில் எல்லாம் உள்ளடக்கிச் சொல்லி விட்டார்.

அந்த ஊரில் இதற்கு முன் இரண்டே இரண்டு பெண் பட்டதாரிகளே உருவாகியிருந்தார்கள். இருவரும் ஏழாம், எட்டாம் வகுப்பு முதலே வெளியூரில் படித்து கெம்பஸ் போனவர்கள்தான். இருவருக்குமே வெளியூரில் மாப்பிள்ளை வாய்த்ததால் ஊருக்கு டாட்டா காட்டி விட்டார்கள்.

ஃபர்வீனா உள்ளூரிலேயே விலைபோய் விட்டாள். அது ஒன்று தான் வித்தியாசம்.

“இனி பாத்துப் பாத்தீக்கேல. கொஞ்சம் கொஞ்சமா ரெடியா கோணும். ஒடஞ்சி தகந்தத்தியள சரிபண்ணி சாந்து சாயம் பூசோணும்.”

“ஓ... மால போட வரமுந்தி இருக்கிய ஒடம சாமனியள அழிச்சி புதிய பெடன்ல சரி பண்ணிக் கொளோணும்... நக நட்டெண்டு செய்கூலி மட்டுந்தான் வரும். கலியாணச் சாப்பாட்டேம் கொஞ்சம் பெரிசாச் செய்யவாகும். அவங்கட பெரிய குடும்பம்... யாவாரியள் அப்பிடிப்பிடித் தெரியவா...”

உம்மா வாப்பா மட்டுமென்ன அவளும்கூட இனி கல்யாணத் துக்கு தயாராக வேண்டுமே. புதியதோர் மனோ நிலைக்குள் அவள் ஆழ்ந்துதான் போனாள்.

அவள் வளர்த்த கனவுகள், பேசிய சீர்திருத்தங்கள், திட்டமிட்ட நடவடிக்கைகள் எல்லாம் ஒவ்வொன்றாக உதிர ஆரம்பித்தன.

# 19.

மரீனா தடுமாறித்தான் போனாள். இச்செய்தியைச் சுமந்து கொண்டு வந்திருந்த றம்ஸியாவின் முகத்திலும் பிரகாசம் துளிகூடப் படிந்திருக்கவில்லை.

கெம்பஸ் ஃபர்வீனாவுக்கு திருமணம் நிச்சயமாகி விட்டதாம். நேற்று இரவோடு இரவாக ஃபாதிஹா ஓதிவிட்டார்களாம்.

சந்தோஷப்பட வேண்டிய விடயம்தான். ஆனால் அவர்களால் சந்தோஷப்பட முடியவில்லை.

சர்வ சாதாரண குடும்பத்தில் பிறந்தவள் ஃபர்வீனா. அவள் ஜீ.ஸீ.ஈ. சித்தியடைந்த போது வெளியே ஏ.எல். படிக்கப் போக வசதி இருக்கவில்லை. அவளை விடக் குறைந்த தரத்தில் சித்தி பெற்ற இருவர் மாவனல்லைக்குப் போய்விட்டார்கள்.

என்ன செய்வது? அப்போதிருந்த அதிபரும் ஆசிரியர்களும் சேர்ந்து ஃபர்வீனாவையும் இன்னும் இருவரையும் சேர்த்து ஊரிலேயே வகுப்பு ஆரம்பித்தார்கள். அப்போது ஒரேயொரு

பட்டதாரி ஆசிரியையே அங்கு சேவையாற்றினார். சுயதிறமையும் கடும் முயற்சியும் கைகொடுத்ததால் அவள் பல்கலைக் கழகப் பிரவேசம் பெற்றாள்.

தனது ஆரம்பத்தை மறக்காமல் சேவையாற்றத் துணிந்தவளின் எதிர்காலத்தை இந்தத் திருமண ஏற்பாடு இருளடையச் செய்து விடுமோ என்னவோ!

மொமஸாதிக் ஹாஜியாரின் ஒன்றுவிட்ட தம்பியின் வாரிசே மணமகன் என்பதால் எந்த நிலைப்பாட்டுக்கும் அவள் தன்னை இயைபாக்கிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும்.

'பிச்சச் சம்பளமெடுக்கும் உத்தியோகமே வேணாம். நல்ல குடும்பப் பெண்ணாக இருந்தால் போதும்' என்று சொல்லா மலிருப்பார் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை.

"சும்மாவாலும் எங்களுக்கு வரச்செல்லல்லேன். கூட்டாளித் தனத்தேம் மறந்து பெய்த்திட்டாள்" றம்ஸியா துளியளவும் நம்பிக்கையற்றுச் சொன்னாள்.

"சரி எதுக்கும் நாங்க போம். எங்கட விஷயத்தேம் பேசீட்டு வரோம்" மரீனாவுக்கு துளியளவு நம்பிக்கை இருந்தது.

"பேசி வேலில்ல" றம்ஸியா அலுத்துக் கொண்டாள்.

ஃபர்வீனாவின் வீட்டை அடையும் போது மாலையாகி விட்டது. அவள் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை போலும்.

புதுமணப் பெண்ணைப் போலவே அவள் புத்தாடைகளோடு மணக்க மணக்கக் காணப்பட்டாள். பலரும் வருவதும் போவது மாக இருந்தனர்.

"ஒத்தருக்கும் செல்லல்ல. கோச்சிக்கொள வாண" கை களைப் பிடித்து இருவரையும் வரவேற்றாள்.

"நடக்க வேண்டிய விஷயம்தானே. எங்களுக்கும் சந்தோஷம்" சிரித்துச் சமாளித்தாள் மரீனா.

“நாளன்டக்கி நீங்க கட்டாயம் வரோணும்” றம்ஸியா ஞாபக மூட்டினாள்.

அவளது முகம் வாடிப்போய்விட்டது.

“எனத்தியன் பேசாமீக்கிய?” மரீனா.

“கலியாணம் முடியங்காட்டீம் ஒரு வெடத்துக்கும் பொக வாணான்டு அவரு செல்லி அனுப்பீக்கி” வெட்கப்பட்டுக் கொண்டே சொன்னாள்.

“மெய்யா... அப்ப கலியாணம் முடிஞ்சாப் பொறகு” றம்ஸியா குறுக்குக் கேள்வி போட்டாள்.

“அவரு செல்லிய மாதிரிதான் செய்யோணும்”

“நாங்க நெனச்சியதெல்லாம் நடக்கியல்லேன்” றம்ஸியா.

“ஊரு விஷயங்களும் நடக்கோணும். நீங்க தொடங்கினத்த நடத்துங்கொ. எனக்கு ஏன்ட வாழ்க முக்கியமேன். இப்பிடியொரு பெரிய எடத்தால கேட்டுவருமென்டு மனாவிலயாலும் நம்பல்ல”

இதற்கு மேல் பேசிப் பிரயோசனமில்லையென்ற அளவுக்கு அவள் சொல்லிக்கொண்டு போனாள்.

பெருமூச்சு விட்டபடி இருவரும் எழுந்தனர்.

# 20.

மஸ்தான் ஹாஜி - ஃபர்வீனா கல்யாணம் தீர்ப்பாகிவிட்ட செய்திதான் இப்பொழுது ஊரெல்லாம் பேச்சாகவிருந்தது.

"ஓதிப் படிச்சிக் கொண்டு தாரு வந்தாலும் பெரிய ஹாஜி எப்பிடிச்சரி அவங்கட குடும்பத்துக்கு எடுக்கிய. ஆச்சியப்பன் காலத்திலீந்து இன்டவரக்கும் இது நடக்கிய... ரெண்டொரு விஷயம் பொறத்தீ ஊரில நடந்தீக்கியது மெய்தான்." அபுபக்கர் தனது அனுபவப் பதிவை மெய்ப்பித்தார்.

"அதாலதான் மச்சான் ஊரு முன்னேறாத... எடுத்துப் பேச ஒத்தருமில்ல. பள்ளீல... ஸ்கூல்ல... ஒவ்வொரு எடத்தில நடக்கிய ஜாதி தெரீந்தானே" இன்னொரு கோணத்தில் தன் அபிப்பிரா யத்தை முன்வைத்தான் இபுராகீம்.

இளம் பொடியன்கள் வயல் பிட்டணியில் மட்டபோல் அடிப் பதைப் பார்த்து இரசித்தபடி விஜயமான கிணற்று மதிற்கட்டில்

அமர்ந்திருந்தோர் மிக முக்கியமான விவகாரமாக இதனை எடுத்து அலசினார்கள்.

"அப்பிடிச் செல்லவானா இப்ப கொஞ்ச நாளா சலசலப் பொன்டீக்கி. அந்த ஜெமீல் நானட மகள் ஆம்புள மாதிரி ஒவ்வொரு ஜாதி செய்த... மத்திச்சம்மாருக்குப் பெரிய பொகுத் தெரிச்சல்."

"நானும் பேரு நெனவில்லாம யோசிச்சி யோசிச்சி நின்ட... அவளுக்குத்தான் கெம்பஸில பீ.ஏ. படிச்சிட்டு வந்த புள்ளேம் ஸபோட் பண்ணிக்கொண்டு நின்ட... இப்ப அவளுக்கு மால போட்டிட்டாமேன்"

"மெய்யா அப்ப இனி கத குளோஸ்தான். இப்பிணி மாப்பிள செல்லியத்த கேக்கோணுமேன். ஒரு விஷயத்திலேம் தலபோட வாணான்டு செல்லியனுப்பீட்டாம்"

"பாருங்கொ பாக்க செய்த அநியாயத்த. மனிசருக்கு ஒரு நலவு நடக்க உடுகியல்லேன்"

இளம் பொடியன்களின் மட்டபோல் விளையாட்டு பெரும் ஆரவாரத்தோடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெரிதாக எந்தப் பொழுது போக்குமில்லாததால் அஸர் தொழுதால் வயற்கரைப் பக்கம் எல்லோரும் வந்து விடுவார்கள். கரை வழியே கூட்டமாக அமர்ந்து கதைத்து ரசித்துப் பொழுது போக்குவார்கள்.

ஒரு காலத்தில் கடற்கரைக்குப் பொகும் பழக்கம் இருந்து வந்தது. இப்பொழுது படிப்படியாக இது அருகிவருவதற்குப் பல்வேறு காரணிகள்.

"தெரீமா கோழிக்குஞ்சு குடுத்தாங்க... தையல் வகுப்பு வெச்சாங்க... மொண்டிஸூரிக்கி சாமன் சட்டி குடுத்தாங்க... படிச்சிக் குடுக்கிய புள்ளயளுக்கு ஒதவீம் செய்தாம். எனத்த சரி நடந்து கொண்டீக்கியேன்"

"இந்தமட்டுப் படிச்ச புள்ளக்கி புத்தில்லயா... படிச்ச மாப்பிள மாரு வேண்டிய மட்டும் ஈக்கிதானே. எங்கடூரில இல்லாட்டீம் கிட்ட நட்டத் தேடிக்கொளேலாப் போரெல்லேன்... கலியாணத் தோட அந்தக் குட்டிய கெணத்தில போட்ட மாதிரிதான். பாத்துக் கோங்கொ... அரசாங்க ஜொப்புக்கு பொகுடமாட்டாங்க. நான் செல்லியது பொய்யென்டா ஏன்ட காத வெட்டுங்கொ..."

"அதல்ல மசான் ஸ்கூல் செய்தி கேள்விப்பட்டா... அம்ரிதா ரீச்சருக்கு பெடிசன் அடிச்சீக்காம். ஊரு வேல வெட்டீல தலப் போட்டுக் கொண்டு திரீதாம் படிச்சிக் குடுக்கியல்லயாமெண்டு. பாவம் அந்த ரீச்சர் புள்ளயளோட உசிருமாதிரி. ஹாஜிமாரட புள்ளயளுக்கு ஊட்டுக்கு வந்து இங்கிலிஸ் படிச்சிக் குடுக்காத கோவமுமீக்காம்."

"டிங்... டிங்" என்று மணியடித்தபடி பக்கிர் காக்காவின் பக்கடாக் கரத்தை அந்தப் பக்கமாக வந்தது. பத்து ரூபாத் தாளொன்றை நீட்டினான் இபுராகீம்.

பக்கடாச் சுருள் இருவருக்குமிடையில் விரிந்தது. மாறி மாறி ஒவ்வொரு துண்டாக நொறுக்கிச் சுவைத்தனர்.

செம்மேகம் மெல்ல மெல்ல மறைந்து இருள் கவிய ஆரம்பித்தது. எவ்வாறாயினும் மஃரிபுக்கு பாங்கு சொல்லும் வரையில் எவருமே அங்கிருந்து அசையமாட்டார்கள்.

# 21.

பெண் மையத்து குளிப்பாட்டலுக்கான செய்முறை விளக்கம் - வயது வந்த பெண்கள் கலந்து கொள்ளலாம்.

மாதர் சங்கத்தின் கையெழுத்துச் சுவரொட்டி ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்தது.

“ஓ... பெரிய கரச்சல். பொம்புளயள் மௌத்தானா காரு கொணு பெய்த்து ஆள் கொணுவரோணும். கொஞ்சம் பேரு பழகிக் கொண்டா நல்லந்தானே”

“அவங்கவங்கட மையத்தியள குளிப்பாட்டிக் கொளேலுமேன். இப்பிடி தேவப்பட்ட விஷயமியள பாத்துப் பாத்துச் செய்யோணும்.”

இப்படியாக தெருவிலே நின்று நோட்டீஸைப் பார்த்துவிட்டு பலரும் அபிப்பிராயப்பட்டுக் கொண்டனர்.

ஆனால் சிலருக்கு இது பொறுக்கவில்லை.

தாஹிர் மத்திச்சத்துக்கு கோபம் வேறு வந்துவிட்டது.

அஸர் தொழப் போனவர் பள்ளிஹஸ்ரத்திடம் தனது மனக் கக்கிஷத்தைக் கொட்டினார்.

“ம்... மையத்துக் குளிப்பாட்டச் செல்லிக் குடுக்கப் போறாம். இவளவு நாளும் குளிப்பாட்டாமலயா நாங்க மையத்தடக்கின. இதப் பத்தி நீங்க ஜும்மாவில பேசோணும். நாளக்கி எங்களுக்கு கலிமாச் செல்லித் தரேம் வருவாங்க”

ஹஸ்ரத்துக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. இந்த நோட்டீஸை அவரும் பார்த்தவர்தான். ‘கட்டாயம் செய்ய வேண்டிய வேல’ என்றே அவர் மனம் சொன்னது.

இப்பொழுது அதற்கு மாற்றமாக பேசவேண்டிய நிர்ப்பந்தம்.

அவர் ஜும்ஆ பிரசங்கத்தில் இதையொன்றும் எடுத்துப் பேசவில்லை.

தொழுகை முடிந்த பின்பு எழுந்தார்.

“மையத்து மீதான கடமைகளில் குளிப்பாட்டுவதும் ஒன்று. இதைப் பக்குவமாகச் செய்ய வேண்டும். இதற்கான விளக்கங் களை ஆலிம் உலமாக்கள் மூலம் வழங்க வேண்டும்” என்று பட்டும் படாமலும் சொல்லித் தப்பிக்கொண்டார்.

யார் என்ன சொன்னாலும் அன்று பின்நேரம் இடம்பெற்ற செய்முறை அமர்வில், மிகுந்த ஆர்வத்தோடு பெண்கள் கலந்து கொண்டனர்.

அதற்கென்றே தயாரிக்கப்பட்ட மையத்துவாளி, பாவைப் பிள்ளைகள், துணிமணிகளோடு விளக்கமளிப்பவர்கள் வந்திருந்தனர்.

அனுபவப்பட்ட பெண்கள் இருவர் மாத்திரமன்றி மௌலவியா ஒருவரும் வந்திருந்தனர்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் மாதர் சங்கத்துக்கூடாக அம்ரிதா ரீச்சர் மேற்கொண்டிருந்தார்.

இனி வெளியூரிலிருந்து ஆள் கொண்டுவரத் தேவையில்லை என்பது அங்கு உறுதியாகிவிட்டது.

"எவளவு ஜாதியா செல்லித் தந்தன். இப்பிடியொரு நல்ல விஷயத்துக்காலும் எடமுடாதவனியள் இன்னேமீக்கேன்" ஒரு வயதாளிப் பெண் அப்பட்டமாக தன் கருத்தை வெளியிட்டார்.

"மெய்தான் மெய்தான் ஆண்டவன் ஊரில ஏன்டவன் கூத்து" இன்னொருவர் அதை வழிமொழிந்தார்.

மரீனா முதலானோருக்கு இன்னொரு அரிய காரியத்தை அரங்கேற்றிய பெருமிதம்.

# 22.

இரண்டு சிறுவர்கள் நோட்டீஸ் பகிர்ந்து கொண்டிருந் தார்கள். பச்சை நிற நோட்டீஸ். இப்பொழுதெல்லாம் ஹஜ் டிரவல்ஸ்காரர்தான் இப்படி நோட்டீஸ் போடுவார்கள். இருந் திருந்துவிட்டு குழப்படி நோட்டீஸ்களும் வருவதுண்டுதான். ஆனால் இது அதில் சேரவில்லை.

'சமூர்த்தி பெறுவோருக்கு கடன் வசதிகள்' ஒருவர் உரத்து வாசித்த போது, சூழவர நடந்தவர்கள் காதுகளைக் கூர்மைப் படுத்தி உள்வாங்கிக் கொண்டனர்.

சமூர்த்தி உதவியை அவசியமில்லாமலும் வெட்கமில்லா மலும் பெறுவோர் அங்கு ஏராளம். கடன் கொடுப்பதாக இருந் தாலும் அவசியமில்லாதவர்கள் அங்கே முண்டியடிப்பார் களென்பதே யதார்த்தம்.

'சும்மா குடுத்தா தலக்குத்தென்டாலும் எடுத்துக்கொளு வாங்க'' என்று சொல்வார்களே அப்படித்தான்.

எப்படியும் நான்கு பேருக்கு ஒருவரின் கையில் அந்த நோட்டீஸ் காணப்பட்டது. அது தொடர்பான பேச்சுக்களுடனே நடந்த வண்ணமிருந்தனர்.

'இது சம்பந்தமான மேலதிக விபரம் அறிய விரும்புவோர் உங்கள் பகுதி சமூர்த்தி உத்தியோகத்தரைச் சந்திக்கவும்.'

"ஆ அப்பிடீம் போட்டீக்கா. அப்ப நாங்க தாரயன் சந்திக் கோணும்."

"இதெனத்தியனப்பா... தெரியவா எங்கட ஜெமீல் நானட மகள்"

"ஆ அந்தக் குட்டியா... அப்ப இன்டக்கே பெய்த்து அம்பு டோணும்"

"சும்ம போற வாரவங்களுக்குக்கெல்லம் குடுக்கியல்ல. குடும்ப கைத்தொழிலுக்காம் குடுக்கிய"

"ம்... முந்தி எப்பிடிச்சரி கடனெடுக்கிய. கொஞ்ச நாளக்கி எனத்தசரி செய்த. அங்கீந்து நட்டமென்டு செல்லியதானே"

எப்படி ஏமாற்றலாமென்று மிகவும் இலேசாகச் சொன்னார் ஒருவர். மற்றவர்களும் வாய்விட்டுச் சிரித்து ஊருலகத்தில் இப்படியெல்லாம் நடப்பதை அத்தாட்சிப்படுத்தினர்.

"கடனெடுக்கியது சம்பந்தமா நல்ல ஐடியா வோணுமென்டா எங்கட ஜப்பார அம்புட்டாச் சரி"

"தாரயன் ஜில்மால் ஜப்பாரயா"

"ஓ... ஓ... மனிசன் சுனாமிய கண்ணால காணாமலயே சுனாமி ஆதார எடுத்த மனிசனேன்"

மாலையாகும் போது நோட்டீஸ் தகவல் வீடுகள் தோறும் பேசப்பட்டாயிற்று. ஏதோ கேட்பவர்களுக்கெல்லாம் அள்ளியள்ளிக் கொடுக்கப் போகிறார்களென்ற எண்ணமே பெண்கள் தரப்பில் மேலோங்கியிருந்தது.

சமூர்த்திக் காரியாலய மூலமாக அந்தப் பிரதேசமெங்கும் அந்த அறிவித்தல் பிரசாரப்படுத்தப்பட்டிருந்தது. பத்திரிகைகளிலும் விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. சமூர்த்திச் செயற் திட்டத்தி னூடாக பொருளாதாரத்துறையிலும் சமூக அபிவிருத்தியிலும் கணிசமான மாற்றங்களை கொண்டுவர வேண்டுமென்பதே பெரும் இலக்காகவிருந்தது.

அன்று மாலையில் அலுவலகத்திலிருந்து மரீனாவும் தொண்டராகச் செயற்படும் றம்ஸியாவும் வீட்டுக்கு வரும்போது முற்றத்தில் குழுமி நின்ற சனத்தைக் கண்டு பிரமித்துப் போய் விட்டார்கள்.

மரீனாவைச் சூழ்ந்து கொண்டோருக்கு மத்தியில் கடன் பெறும் முன்னடவடிக்கைகள் தொடர்பாகப் பிரசங்கமே நடாத்த வேண்டும் போலிருந்தது. எல்லோருடைய கேள்விகளையும் மனதுக்குள் வரிசைப்படுத்தி தொகுத்து வழங்கினாள்.

"சமூர்த்தி காட் உள்ளவங்களுக்கு கடனெடுக்கேலும். நீங்க ஒரு கைத்தொழில் செய்யோணும். அதுக்கேத்த மாதிரி கடன் தருவாங்க. எனக்கட்டில்ல ஒபீஸாலதான் ஃபோம் எடுக்கோணும்."

எல்லோருக்கும் கடன் கிடைத்து விட்டது போல் சந்தோஷம். கைத்தொழில் செய்தாலென்ன செய்யா விட்டாலென்ன எப்படி யாவது கடன் எடுத்துவிட வேண்டுமென்ற வேகத்தோடு ஒவ்வொருவராகக் கலைந்தனர்.

மரீனாவும் றம்ஸியாவும் வீட்டுக்குள் புகுந்தனர்.

# 23.

அம்ரிதா ரீச்சருக்கு இடமாற்றக் கடிதம் வந்திருந்தது. இதனால் அவர் ஒன்றும் அதிர்ந்து போகவில்லை. எதிர்பார்த்தது தான்.

பெரும்பாலான மாணவர்களுக்கு இது புதிய செய்தியாகவே இருந்தது. அவர்களால் சீரணிக்கவும் முடியாமலிருந்தது. அந்த இடத்தை இன்னொருவரால் நிரப்ப முடியும்தான். பாடரீதியான தேவையும் நிறைவேறும்தான். ஆனால் 'அம்ரிதா ரீச்சர்' என்ற முழுமையை அடையப்போவதில்லையே.

"பிள்ளயள் நீங்க அழவாண. புதிய ரீச்சர் வாரொன்டும்."

இந்தத் சமாளிப்புக்கள் எதுவும் அங்கு எடுபடவில்லை.

மேல்வகுப்பு மாணவர்கள் பாடசாலை நிர்வாகம் மீது ஒருவித வெறுப்பைக் கக்கினர். இடமாற்றத்தின் பின்புலத்தை அவர்களால் ஓரளவு புரிந்துகொள்ள முடிந்தது. ஏதாவதொரு வகையில் எதிர்ப்புணர்வைக் காட்டத் துடியாய்த் துடித்தனர்.

கடந்த வாரம் அம்ரிதா ரீச்சருக்கு எதிரான பெட்டிசத்தை விசாரிக்க அலுவலக அதிகாரிகள் வந்திருந்தனர்.

நாற்பது பேர் அளவில் கையொப்பமிட்ட பெட்சம் அவர்கள் வசமிருந்தது. அது யார்? எவர்? என்றறிய வேண்டிய தேவை ரீச்சருக்கு இருக்கவில்லை.

ஒழுங்காப் படிப்பிப்பதில்லை, நடத்தைகள் மோசம், ஊரி லுள்ள குழப்படிக்காரர்களோடு தொடர்பு, இப்படியெல்லாம் குற்றச் சாட்டுக்கள் அடுக்கப்பட்டிருந்தன.

ஆசிரியையை இடமாற்றம் செய்வதாயின் அதனைத் தான் ஆட்சேபிக்கவில்லையென அதிபர் ஒழிவு மறைவின்றிச் சொல்லி விட்டார்.

இதனையெல்லாம் கேள்வியுற்று எதிர் நடவடிக்கை மேற் கொள்ள இன்னொரு சாரார் முன்னெழுந்த போதும் ரீச்சர் அதனை ஆதரிக்கவில்லை.

உத்தியோகபூர்வ ஆவணங்களை பெற்றுக்கொண்டு ரீச்சர் அமைதியாக வெளியேறியபோது பாடசாலை சோகத்தில் மூழ்கிப் போயிருந்தது.

ரீச்சர் வெளியிறங்குவதற்கும் அங்கு மரீனாவும் இனாயாவும் வருவதற்கும் சரியாகவிருந்தது. மூவரும் மரீனாவின் வீட்டுப் பக்கம் சென்றடைந்தனர்.

இதற்கிடையில் அங்கு பகல் சாப்பாட்டுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்திஸாமும் பாரிஸும் வந்து போனார்கள். இன்னும் பலரும் வந்து கவலை தெரிவித்து விடைபெற்றனர்.

தனக்கு இடமாற்றம் வந்தாலும் அதன் மூலம் பலரும் சமூக யதார்த்தங்களைப் புரிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பமாக அமைந்ததையிட்டு ஒருவகையில் மகிழ்ச்சி கொண்டார்.

ரிபாஸ் தனது மாமனாரின் வேனைக் கொண்டு வந்திருந் தான். பெட்டி, படுக்கை, புத்தகங்களையெல்லாம் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டுமல்லவா?

வெளிக்கிடும் நேரம் நெருங்கி விட்டது.

"எல்லாரேம் சந்திச்சிட்டன். ஃபர்வீனாவ மட்டுந்தான் காணல்ல. நான் கேட்டெண்டு செல்லுங்கொ"

ரீச்சர் இப்படிச் சொன்னபோது பலரதும் கண்கள் கலங்கத் தவறவில்லை. அது ஃபர்வீனா வராததற்காக அல்ல; ஒரு உதிர்ந்து போன நம்பிக்கை நட்சத்திரத்திற்கான கண்ணீர் அஞ்சலி.

"ஸ்கூல்லீந்துதான் எனக்கு ட்ரான்ஸ்ஃபர். ஊரோடேம் ஒங்க ளோடேம் நான் என்டக்கும் இருப்பன்" என்று சொல்லியபடியே ரீச்சர் பேக்கைத் தூக்கினார்.

ரிபாஸ் வாகனத்தை ஸ்டாட் செய்தான். ஜெமீல் நானா முன்னே ஏறிக்கொண்டார். ரீச்சரும் மரீனாவும் பின்னே அமர்ந்தனர்.

கைகள் அசைய வாகனம் நகர்ந்தது.

# 24.

றம்ஸியாவின் வீட்டுப் பக்கவாட்டு மரநிழலில் கதிரைகள் போடப்பட்டிருந்தன.

மரீனா பரிவாரத்தினர் அங்கே அமர்ந்து ஆறுதலாக சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

றம்ஸியா இன்னும் அவர்களோடு வந்து ஒன்றவில்லை. வீட்டில் விருந்தென்றால் அவளுக்கும் பல கடமைகள் இருக்காதா என்ன?

இனசனத்து பெண்களையும் சிறு பிள்ளைகளையும் மாத்திரம் உள்ளடக்கிய ஆஸரா சாப்பாடு. எது தவறினாலும் அவளது உம்மா பீபி தாத்தா வருடாந்தம் இதனைச் செய்யத் தவறுவதில்லை.

பத்து ஸவனுக்கு மேல் போகவில்லை.

இருந்தும் மாதர் முன்னேற்றச் சங்க முக்கியத்தர்களையும் உறவினராகக் கொண்டு அழைத்திருந்தமைதான் அங்கு சிறப்பு.

"றம்ஸியா பிங்கான் கோப்ப கழுகியாயீக்கும். நாங்களும் பெய்த்து ஒதவி செய்யோமா" புதிய யோசனையாக இனாயா கேட்டாள்.

“வாண வாண ஒங்கட உடுப்பியள் மசங்கியொண்டும்” என்றபடி வந்தாள் றம்ஸியா.

“சின்னச் சாப்பாடென்டாலும் நல்ல ரசம். எறச்சாணம் ஜாதி. இன்னேம் கைமணக்கிய” விகாயா கையை முகர்ந்தபடியே சொன்னாள்.

“வேறதாரன் ஆசும்மதான் ஆக்கின. கலியாணமாக்கியத்துக்கும் அவவப் பேசிக்கொளேலும்”

எல்லோரும் சிரித்தனர். கல்யாணமென்றால் யாருக்குத்தான் சிரிப்பு வராது.

“தாரட கலியாணமன் முந்தி முந்தி வார. செல்லுங்கொளே... அவ பொகமுந்தி புக் பண்ணீட்டு வாரத்துக்கு” இனாயா எழுந்தபடி கேட்டாள்.

யாரிடமும் அதற்குப் பதில் இருக்கவில்லை. சிலருக்கு கல்யாணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

இன்னும் சிலருக்கு பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சிலர் காதல் ராகம் இசைத்த வண்ணமிருந்தனர்.

மொத்தத்தில் நாள் குறிக்கப்பட்ட நிலையில் எவருமே இருக்கவில்லை.

“மனாக் காணியவங்கதான் இவடத்திலீக்கிய. இப்பிடிச் செய்யோமா... எங்கட ஃபர்வீனட கலியாணத்துக்கு புக் பண்ணோமா?” இங்கே இருக்க வேண்டியவள். ஆனால் இல்லையென்பதை குத்திக் காட்டி றம்ஸியா சொன்னாள்.

“அந்தக் கலியாணம் எந்த ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல நடக்குமோ” மரீனா இன்னொரு போடு போட்டாள்.

விளையாட்டும் வேடிக்கையுமாக அவர்கள் பேசிய பேச்சுக்கள்

உண்மையில் அங்கு பேசவிருந்த விடயத்தை நோக்கி அவர்களை நகர்த்தியிருந்தது.

"நாங்க தொடங்கின வேலயெல்லாம் அல்லாட ஒதவியால நடந்து கொண்டீக்கி. இதட பொரோசனத்த மனிசரு அடஞ்சிக் கொண்டீக்கியாங்க... எந்தப் பிரச்சின வந்தாலும் ஒன்டயாலும் கையுடல்ல. அது எங்களுக்கு பெரிய வெத்தி. அப்பிடித்தானே"

மரீனாவின் முன்வைப்பை எல்லோரும் தலையாட்டி ஏற்றுக் கொண்டனர்.

"எங்களுக்கு முக்கியமான ரெண்டு கரச்சல் நடந்தீக்கி. ஒன்டு ஃபர்வீனாட கேஸ். சரி தனிப்பட்ட விஷயமெண்டு உட்டுப் போடோம். ஆனா அம்ரிதா ரீச்சர் மாத்தினத்த நாங்க உட்டுப் போடேல" ராஹிலா கோபத்தோடு கொப்பளித்தாள்.

ஒழுங்கு குழம்பி விட்டது. எல்லோருமே உணர்ச்சி வசப்பட்டே கதைத்தனர். பேசாமல் விடுவது பெரும் தலைக்குனிவென்றே ஆவேசப்பட்டனர். மீண்டுமொரு அமைதி நிலை. அதுதான் மரீனாவுக் குரிய நேரம் போலும்.

"அம்ரிதா ரீச்சர மாத்தினது எங்கள பின்னுக்காக்க செஞ்சவேல தான். அதே நேத்தேல எல்லாரேம் புள்ளயளேம் ஒவ்வொரு குடும்பத்தேம் பாதிக்கிய. அதச்சொட்டீம் வேற தாருசரி நடவடிக்க எடுக்கியென்டா எடுக்கட்டும். ரீச்சர் எங்கீந்தாலும் அவட ஒதவி எங்களுக்கீக்கி. இதியல்ல நாங்க எறங்கினா அது எங்கள வேறொரு பொக்கத்துக்கு கொணுபொகும். நாங்க போற போக்கில பெய்த்துக் கொண்டீக்கோம்."

மிகுந்த தெளிவோடும் தைரியத்தோடும் வழிநடத்தலோடும் மரீனா சொன்னவை எல்லோரையும் நிதானப்படுத்தியது.

"ஆ கொணுவாங்கொ கொணுவாங்கொ. எல்லாருக்கும் தேவப் பட்டுக்கொண்டீந்த." றம்ஸியாவின் உம்மா கொண்டுவந்த கோப்பிக் கோப்பை எல்லோரது கவனத்தையும் குவித்தது.

# 25.

ராஹிலா தாத்தா எழுபத்திரண்டு வயதில் காலமாகிவிட்டார்.

ஐந்து மணிக்கு அடக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்ட போதும் மூத்தமகள் கண்டியிலிருந்து இன்னும் வராததால் சற்றே தாமதமாகியிருந்தது.

மையத்துக் குளிப்பாட்டும் கடமையை மேற்கொள்ள இரண்டு பெண்கள் முன்வந்திருந்தனர். மாதர் சங்கம் வழங்கிய பயிற்சியின் விளைவு என்பதை அன்று பரவலாக எல்லோரும் பேசத்தலைப் பட்டனர்.

மையத்து அடக்கத்துக்காக வந்திருந்த மோதினார், ஹஸ்ரத் எல்லோரும் முன்னே அமர்ந்திருந்தனர்.

"நல்ல விஷயங்கள தாரு செஞ்சாலும் செய்யுடோணும். இப்ப ஆலிம் உலமாக்களும் சல்லிக்கேன் பேசிய"

யாரோ ஒருவன் பொறுத்துக் கொள்ளாமல் பேசியதை ஹஸ்ரத் கேட்டும் கேட்காதது போல் இருந்துவிட்டார்.

ஐஸாயிர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு கொஞ்சம் ஓடியாடித் திரிந்தான். மையத்து வீடுகளில் எடுபிடி வேலை பார்த்து அடி மடியடிக்கும் மகிழ்ச்சியோ என்னவோ!

மத்திச்சம்மாரும் மாமரத்தடியில் ஒன்று கூடியிருந்தனர். முன்னறிவித்தல் இல்லாத மகாநாட்டை நடாத்தினர். எல்லோரது முகத்திலும் மகிழ்ச்சிப் பிரவாகம்.

ஏதோ எல்லாவற்றையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டது போன்ற ஆனந்தம் அவர்களுக்கு.

"எப்பிடிச்சரி அந்த ரீச்சர அனுப்பீட்டாமெனா"

ஏதோ எனது ஆதரவும் உங்கள் பக்கம்தான் என்று காட்டிக் கொள்ளும் எத்தனம்.

"நாங்கனுப்பத் தேவில்ல. அடக்க ஒடுக்கமா மானம் மரு வாரிய காப்பாத்தி நடந்துக்கொளோணும். இல்லாட்டி அல்லா பாத்துக்கொளுவான்."

அணுவும் பிசகாமல் நடந்து கொள்பவர் போல் இரண்டாம் மத்திச்சம் பிரஸ்தாபித்தார்.

"பொம்புள ஊட்டுக்குள்ள தலயெடுத்தா அந்தக் குடும்பம் நாசம்... ஊருக்குள்ள தலயெடுத்தா ஊரு நாசம்" ஆதில்ஹாஜி இன்னொரு தத்துவார்த்தத்தை முன்வைத்தார்.

"செல படிச்ச பொடியம்மாரும் சபோட் குடுக்கியேன் ஹாஜி" இன்னொருவன் வாயைக் கிளறினான்.

"நான் கேக்கிய... படிச்சி மட்டும் போதுமா? அறிவுக்குள்ள சொறிவென்டு செல்லியெனா... ஆ... அப்பிடி ஆள்கள்தான் அது" எதிர்கால மத்திச்சம் இல்லியாஸ் ஹாஜியும் ஒப்பம் வைத்தார்.

"இன்னொரு செய்தி தெரீமா... இப்ப கெம்பஸ் ஃபர்வீனா அந்தப் பொகத்துக்காலும் போறல்லயாம். மாப்பிளக்காரன் எல்லம் கேள்விப்பட்டீக்கி. ஒரு ஓடர்தானாம்." பார்வையாளர் வரிசை யிலிருந்து இன்னொரு குரல்.

எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மொமஸாதிக் ஹாஜிக்கு பெருமை பிடிபடவில்லை.

"ஆ மையத்தெடுக்கப் போற போல"

மையத்து ஊர்வலம் நகர ஆரம்பித்தது.

"ஆ ஜெஸாயிர் நானா"

இந்தக் குரலைக் கேட்டு பரபரப்போடிருந்தவர் திரும்பிப் பார்த்தார்.

அங்கு இம்திஸாமும் இன்னும் நண்பர்களும் வந்து கொண்டிருந்தனர்.

"ஆ... தொர" என்றவர் தலையை உள்ளிழுத்த ஆமையைப் போல் நடக்கத் தொடங்கினார்.

# 26.

**மா**காண மட்டத்திலிருந்து சில அதிகாரிகள் பாடசாலைக்கு வந்திறங்கியபோது அதிபர் தடுமாறித்தான் போனார். எதிர்பார்த் திருந்தால் கொஞ்சம் சமாளித்திருக்கலாமென்று நினைத்தார்.

“அம்ரிதா ரீச்சருக்கு எதிரான முறைப்பாடுகள்... ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான பதிவுகள் ஏதாவதிருந்தால் தாங்க.”

“அப்படி ஒன்றுமில்லை” என்றுதான் அவரால் சொல்ல முடிந்தது.

“சரி லீவு... இங்ரிமன்ட் ஃபைல்களத் தாங்கொ”

முகாமைத்துவ உதவியாளருக்குப் பணித்துவிட்டு அதிபர் வெளியிறங்கினார். பாடசாலை அன்று மிகவும் கப்சிப்பாக நடந்து கொண்டிருந்தது. வகுப்பறைகளில் பாடங்கள் ஒழுங்காக நடைபெற்றன. கென்ரீன் வெறிச்சோடிக் காணப்பட்டது.

அதிபர் ஏதோ சொல்ல பியோன் பையன் சைக்கிளில் எங்கோ பறந்தான்.

கேற்றுக்கு வெளியே யார் யாரோ நிற்பது தெரிந்தது. அதிபர் அந்தப் பக்கமாக வந்தார். அங்கே கண்ட காட்சி அவரது வயிற்றைக் கலக்கியது. ஆமாம் ஒரு முப்பது பேர் அளவில் ஆண்களும் பெண்களுமாக காணப்பட்டனர்.

"எனத்தியன் நீங்களியள் இங்க?" அதிபர்தான் கேட்டார்.

எவரும் பதில் சொல்லாமல் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டனர். சக்கரம் மறுபக்கம் சுழலும் உண்மை அவருக்கு நன்கு ஊர்ஜிதமாகி விட்டது.

இதற்கிடையில் இரண்டு ஆசிரியைகள் காரியாலயத்துக்குள்ளே செல்வது தெரிந்தது. அவர்கள் போகின்ற முறையைப் பார்த்தால் அழைப்பு விடுக்கப்பட்டுத்தான் போகிறார்கள் போலும்.

அதிபர் அங்குபோய்த் தலையைப் போட விரும்பவில்லை. பாதையை எட்டியெட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவரது எதிர்பார்ப்புப்போல பியோன் பையன் போன வேகத்தில் வந்து ஏதோ குசுகுசுத்தபோது அவரது முகத்தில் சற்றே பிரகாசம் படர்ந்தது.

இதற்கிடையில் வெளியே வந்த ஆசிரியைகளை எதிர்கொண்டு "எனத்தியன்?" என்று கேட்டு வைத்தார்.

"அம்ரிதா ரீச்சரப் பத்தித்தான்" என்று சிரித்துக் கொண்டு வகுப்புக்குச் சென்றார்கள்.

அவர்கள் அதிபருக்கு எதிராக எதுவும் சொல்லியிருக்க மாட்டார்கள். நிச்சயமாக உண்மையைத்தான் சொல்லியிருப்பார்கள். அந்த உண்மைகள் அதிபருக்கு எதிரான நிலைப்பாட்டையே தோற்றுவிக்கும் என்பது அவருக்கு வெளிச்சம்.

சற்று நேரத்துக்கெல்லாம் மொமஸாதிக் ஹாஜி இன்னும் இருவரோடு அங்கு வந்திறங்கினார். கேற்றடியில் சனங்கள் குழுமி நிற்பதைக் கண்டதும் நெருங்கி வந்து விசாரித்தார்.

"எங்கட புள்ளயள் படிக்கோணும். ரீச்சரப் பத்திக் கேட்டாச்

செல்லியத்துக்கு வந்த'' சட்டென்று ஒரு பொம்புள வெளிப்படை யாகச் சொன்னாள்.

பின்னால் நின்ற இருவரும் அவர்களை வெறித்துப் பார்த்துவிட்டு அவர் பின்னால் உள்ளே சென்றனர்.

அதிபர் ஹாஜியை மிக மகிழ்ச்சியோடு அழைத்துச் சென்றார். அதிபர் ஆசனத்துக்கு முன்பு அவர்கள் அமர்ந்து கொண்டனர்.

மேலதிகாரி மரியாதைக்காக அவர்களைப் பார்த்துச் சிரித்து விட்டு தனது கடமையில் மூழ்கிப் போனார்.

"இவங்கதான் பள்ளிவாசல் தலைவர். ஊர்ப் பெரியவர்'' என்று வலிந்து அறிமுகப்படுத்தி வைத்தார்.

"ஸ்கூல் சம்பந்தமா நாங்க ஒங்களோட கதைக்கோணும்'' ஹாஜி பிரஸ்தாபித்தார்.

"எந்த நேரமும் நீங்க எங்கட ஒபீஸுக்கு வந்து கதக்கேலும். நாங்க இன்டக்கி வேற அலுவலா வந்திருக்கிறம்'' என்று கதையை வளர்க்காமல் நறுக்கிக் கொண்டார் பணிப்பாளர்.

பருப்பு வேகாதென்று ஹாஜிக்கு விளங்கிவிட்டது. கொஞ்ச நேரம் இருந்து பார்த்தவர் மெல்ல எழுந்து வெளியேறினார். அதற்கு மேலும் போகக்கூடிய வலிமை தனக்குண்டென்று சொல்லுமாப் போல் வீறுநடை போட்டார் அவர்.

காலம் மாறித்தான் போய்க்கொண்டிருப்பது அதிபருக்கு மேலும் மேலும் தெளிவாகியது. சுற்று நிருபம், பிரமாணக் குறிப்பு, மனித உரிமை இப்படி என்னென்னவோ ஞாபகத்தில் கிளர்ந்து அவரைக் குழப்பத் தொடங்கியது.

அதிகாரிகள் அம்ரிதா ரீச்சரது பொறுப்பாகவிருந்த வகுப்புக்குள் புகுந்து கொண்டிருந்தனர்.

ஒரு கை பார்த்துவிட்டுத்தான் விடுவார்கள் போலிருந்தது.

# 27.

அதிபருக்கு இருப்புக்கொள்ளவில்லை. ஏதாவதொரு செல்வாக்கைப் பயன்படுத்தி எல்லாம் அப்படியே அமுக்கிவிடத் துடியாய்த் துடித்தார்.

இப்படியான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அனுபவப்பட்டவர்தான். பெரிய ஹாஜியின் குடும்ப வட்டத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில் அதற்கான வாய்ப்பு இருக்கவே செய்தது. எப்படிக் காய் நகர்த்துவதென்பதில் கண்ணாக விருந்தார்.

அதிபர் போய்ச் சேரும்போது பெரிய ஹாஜியும் ஆதில் ஹாஜியும் ஆழமாக ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

"வாங்கொ வாங்கொ ஒங்கட கததான் பேசிய... மெம்பர் தொரயேம் வரச்செல்லீக்கி"

ஆதில் ஹாஜி மிகவும் அக்கறையோடு வரவேற்றுத் தகவல் சொன்னார். அதிபருக்கு உடம்பெல்லாம் குளிர்ந்து போய்விட்டது. கூட்டுப் பொறுப்பை எண்ணிப் பெருமிதமடைந்தார்.

"டைம் பிந்திக்கொண்டு போற. வாரென்டு சென்ன மனிசன இன்னேம் காணல்ல'' பெரிய ஹாஜி ஒருவித யோசனையோடு தான் சொன்னார்.

"மெம்பர் தொர பிஸியான மனிசன். ஒத்தரு பொக ஒத்தரு சந்திக்க வந்துகொண்டீந்தா எப்பிடி வரவன்... ம்... அவரு வரங் காட்டீமீக்காம நாங்க போனா எனத்தியன்'' தன் காரியத்தை சாத்திய மாக்கும் துடிப்பில் அதிபர் கேட்டார்.

"இங்க பாருங்கொ... அவர நாங்க பெரிய மனிசனாக்கிக் கொளப்படாது. நாங்கில்லாட்டி... செலவழிக்காட்டி... அவரு மெம்பராகியா... சூத்தச் சொரிய நகமில்ல. இதுதான் அவரட நெலம''

யதார்த்தத்தை மறந்தவராக மொமஸாதிக் ஹாஜி இறுமாப்போடு கதைத்தார்.

ஆதில் ஹாஜி நாலுபக்கமும் தெரிந்த மனிதன். அந்தஸ்தி லிருந்து இறங்காவிட்டாலும் பொருத்தப்பாட்டோடு சிந்திக்கக்கூடிய பேர்வழி.

"ஹாஜியார் நீங்க செல்லியது மெய்தான். இது கேஸ் பாரம். எங்கட வேலய சாதிக்கியத்துக்கு அவரட சபோட் தேவ. சும்ம நிக்கிய டைம்தானே. ஊட்டுக்கே போம்...''

ஹாஜியார் எழுந்து விட்டார். மூவரும் முற்றத்துக்கு வந்ததைக் கண்டதும் டிரைவர் வேனை ஸ்டாட் செய்தான்.

"மெம்பர் தொரேட ஊட்டுக்கிட்டப் பெய்த்திட்டு வரோம்"

இரண்டு நிமிடத்துக்கு மேல் எடுக்காத பயணமல்லவா?

சொன்னாற் போல் மெம்பர் வீடு நிரம்பித்தானிருந்தது. எல்லாம் இருபது இருபத்தைந்து வயதுப் பொடியன்கள்.

பெரிய ஹாஜியைக் கண்டதும் காஸிம் காக்கா நெருங்கி வந்தார்.

"எல்லம் வெளிநாட்டுக் கேஸ் ஹாஜி. அரசாங்கத்தால கொரியாக்கு அனுப்பியாம். பாவம் எங்கட பொடியன்மாரும் பெய்த்திட்டு வரட்டே"

"சரி சரி நாங்க வந்தீக்கென்டு காதில போட்டிட்டு வாங்கொ" என்றார் பெரிய ஹாஜி.

அதற்கிடையில் தகவல் போயிருக்க வேண்டும். அழைப்பு வந்துவிட்டது. மற்ற வேலைகளைப் பத்து நிமிடம் இடைநிறுத்தி விட்டு உரையாடலை உள்ளறையில் ஆரம்பித்தார்.

"அந்த விஷயந்தான். பிரின்ஸிபலுக்கு கொஞ்சம் கரச்சலாகும் போலீக்கி. மந்திரீக்கட்டச் செல்லி நீங்கதான் லேசாக்கோணும். இது ஊரு வேல வௌங்கினா."

ஹாஜி சொல்வதையெல்லாம் மெம்பர் மிகவும் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்.

"நான் இந்தக் கேஸத் தேடிப் பாத்த. தாரு செஞ்சாலும் நல்ல வேலயெண்டா நாங்க ஸபோட்டக் குடுக்கோணும்... பொம்புளக் குட்டியெண்டாலும் அவளியள் ஊருக்கு வேல

செய்தாளியள்... எங்களுக்கிட்டக் கேட்டுக் கேட்டா எல்லாம் செய்யோணும். அப்பிடீம் ஒருகாலம் ஈந்தது மெய்தான்.''

"அப்ப நாங்க வாரம்'' பெரிய ஹாஜி கோபத்தோடு எழுந்தார்.

"கோச்சிக்கொளவாண... எனக்கு எல்லாரேம் வோணும்... நல்ல வேலயள் நடக்கோணும்''

மெம்பரின் வார்த்தைகள் அவர்களது காதுகளில் எதிரொலித்த வண்ணமேயிருந்தது.

"ஆயிரக் கணக்கில செலவழிச்ச. எங்கட வாகனமெல்லம் ஓடின... இவனுக்கு நல்ல பாடம் படிப்பிக்கோணும்'' என்று புறுபுறுத்தபடி பெரிய ஹாஜி வேனில் ஏறினார்.

அதிபரின் பாடுதான் பெரிய திண்டாட்டமாகவிருந்தது.

## 28.

**ச**மூர்த்தி அலுவலகத்திலிருந்து மரீனா வீட்டுக்கு வரும்போது அங்கே நாலைந்து பெண்பிள்ளைகள் காத்திருந்தனர். எல்லோருமே தையல் வகுப்புக்குப் போகிறவர்களென்று அவளுக்குத் தெரியும்.

"எனத்தியன் எல்லாரும் வந்தீக்கி"

"எங்கட கோஸ் முடிஞ்சி. ஸெடிபிகேட் தரப்போற. சின்னோரு ஃபங்ஷனா நடத்தினா நல்லமென்டு யோசிக்கிய"

"நல்லந்தானே... ஸெடிபிகேட் மட்டுமல்லேன்... தையல் மெஷின் வாங்க கடனும் தாரேன்"

"ஓ... ஓ... அதுக்கு ஒங்களுக்கிட்ட யோசின கேக்க வந்த. மாதர் சங்கத்தால செஞ்சா நல்லந்தானே?"

"நாங்க மாதர் சங்கத்தால எப்ளிகேஷன் சேத்திக் குடுத்த. மத்த விஷயங்களெல்லாம் டிஎஸ் ஒபிஸாலதானே செஞ்ச. எங்களுக்கு இதில மிச்சம் சம்பந்தமில்ல."

“அப்ப எப்பிடியன் ஒழுங்கு பண்ணிய. செல்லித்தாங்கொ மரீன தாத்தா”

“தையல் பயிற்சியாளர் குழுவென்டு போடுங்கொ. கொம்பியூட்டரில சின்ன இன்விடேஷன் காட் அடிச்செடுங்கொ. பிரதேசச் செயலாளர பிரதம அதிதியா கூப்பிடுங்கொ”

“ஊரில முக்கியமான ஆள்கள கூப்பிட்டா நல்லந்தானே”

“ஓ... கட்டாயம் கூப்பிடோணும். அப்பதான் அவங்களுக்கும் வெளங்கிய. நல்லோரு டீ பாட்டீம் ரெடியாக்கோணும்”

தேவையான எல்லா ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு அவர்கள் விடைபெற்றனர்.

நினைத்துப் பார்த்தபோது மரீனாவுக்கு மொத்தத்தில் மகிழ்ச்சிதான். அவள் இதில் சம்பந்தப்பட்டிருக்கா விட்டால் நாற்பது பேருக்கு இந்த சந்தர்ப்பம் கிடைக்கப் போவதில்லை.

அவள் எதிர்பார்த்ததைவிட தையல் சான்றிதழ் வழங்கும் வைபவம் மிகச் சிறப்பாகவே ஏற்பாடாகியிருந்தது. அழைப்பிதழைப் பார்த்தபோது பிரமித்துப் போனாள்.

கட்டணமின்றி நகர சமூர்த்தி வங்கி மண்டபம் வழங்கப் பட்டிருந்தது.

ஊரில் முப்பதுக்கு மேற்பட்டோருக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளதாகவும் கேள்வி.

அன்று மரீனாவும் றம்ஸியாவும் இனாயாவும் நேரகாலத்துடனேயே புறப்பட்டு விட்டார்கள்.

மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தொழிற் பயிற்சிப் பிரிவினர் முழுமையான ஒத்துழைப்பை நல்கிக் கொண்டிருந்தனர்.

குறித்த நேரத்துக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

வரவேற்புரை, தலைமையுரை, சிறப்புரை, சான்றிதழ் வழங்களென்று நேரப் பிசகின்றி எல்லாம் நடந்தது. பிரதேசச் செயலாளர் சகலரையும் பாராட்டிப் பேசினார்.

சிற்றுண்டி உபசாரமும் பெறுமதியாய் அமைந்தது. ஆளுக் கொரு தட்டிலே வட்டிலப்பம், பூவாழை, ரோல்ஸ் என்று சுவை சொட்டியது.

நிகழ்ச்சி நிறைவுறும்போது எல்லோருக்குமே பூரணதிருப்தி.

இம்திஸாமும் அவரது நண்பர்களும் தவறாமல் வந்திருந்தனர்.

மாதர் சங்க செயற்குழுவினரும் நூறு வீதம் சமூகமளித் திருந்தனர். சம்பந்தப்பட்ட யுவதிகளின் பெற்றாரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்.

“பாருங்கொ மரீன தாத்தா. மத்திச்சம்மார் எல்லாருக்கும் குடுத்த. பிரின்ஸிபல், ஹஸ்ரத்துக்கெல்லம் குடுத்த. ஒத்தராலும் வரல்லேன். எங்களுக்கு செரியான கவல” ஏற்பாட்டுக் குழுவினர் மனவருத்தம் தெரிவித்தனர்.

“எல்லாருக்கும் காட் குடுத்ததானே?”

“ஓ”

“நீங்களே பெய்த்துக் குடுத்ததானே?”

“ஓ... ஓ...”

“அதுக்கு மிச்சம் எனத்தியன். வெத்தில வெச்சிக் கூப்பிடச் செல்லியா” மரீனா சற்றே கோபத்தோடு கேட்டாள்.

“எவளவு நல்ல விஷயமன் மகள். ஆறு மாஸம் புள்ள யளுக்கு படிச்சிக் குடுத்து.... மெஷின் வாங்கியத்துக்கு ஒதவீம் செஞ்சீக்கி. அவங்கவங்கட உடுப்பயெண்டாலும் தச்சிக்கொளேலும் தானே”

பெற்றார் சிலர் தங்களது நன்றியுணர்வை வெளிப்படுத்தினர்.

ஊருக்கு வெளியே பிரதேச செயலாளரை அழைத்து இப்படியொரு நிகழ்ச்சியை நடாத்தியமைக்காக எல்லோருக்கும் நன்றி தெரிவித்தாள் மரீனா. விழுந்து போயிருந்த மனநிலை மீண்டும் நிமிர்ந்தெழுந்து விட்ட பூரிப்பு அவளுக்கு.

"ஆ... ஆ... பொம்புளப் புள்ளயள் இருட்டுப்பட முந்தி ஊட்டியளுக்குப் போங்கொ" இப்படி கிண்டலடித்தபடி பாரிஸ் சைக்கிளில் புறப்பட்டான்.

படிப்படியாக மண்டபம் வெறுமையாகிக் கொண்டிருந்தது.

# 29.

“**ஊ**ருக்குள்ள நிக்க நிக்க கரச்சசல்தான் கூடிக்கொணு போறு. காலீலீந்து நல்ல விஷயமொன்டு வந்தீக்கி. வாப்பட ஊருதானே... ஊடுவாசல் தாராம்... மாத்தமெடுத்துக்கொண்டு போனாச்சரி”

பழைய குத்பாக்களைப் போல் உம்மா ஒவ்வொரு நாளும் இதையேதான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இம்திஸாம் உருப்படியாக எந்தப் பதிலும் சொல்வதில்லை.

காசாளராகக் கடமையாற்றும் அவன் கைநிறையச் சம்பளம் எடுப்பவன். சுயதிறமையினால் வங்கித் துறையில் இந்த ஐந்தே வருடத்துக்குள் வேகமாக முன்னேற்றம் கண்டுவிட்டான்.

பொறுப்புக்கள் என்று காத்திருக்க வேண்டிய எந்தத் தேவை யும் அவனுக்கில்லை. ஒரேயொரு சகோதரிக்கும் திருமணமாகி விட்டது. அவளுடனேயே அவனும் உம்மாவும் வாழ்ந்து வருகின்றனர்.

"ஊடுள்ள எடத்தாலதான் மகனுக்குப் பொண்ணெடுக்கிய" உம்மாவின் திருமண மந்திரம் இதுதான்.

பெரிய சீதன ஆதனங்கள் பெற வேண்டுமென்ற எந்த எதிர்பார்ப்புக்களும் அவனுக்கில்லை. ஆனால் வாழ்வதற்கு சொந்தமானதொரு வீடு தேவை என்பதிலிருந்து விலகி நின்று, பெரிய சீர்திருத்தவாதியாகத் தன்னைக் காட்டிக் கொள்ள அவன் நாடவில்லை.

"நல்லோரு குட்டி. சோதினேம் பாஸாகீக்கி. ஊடுமீக்கி. வாப்பட சொந்தமுமாகிய" தாத்தாவும் கூடவே சான்றிதழ் வழங்கி நின்றாள்.

பேசாமல் காரியத்தை முடித்துக் கொண்டு ஊரைவிட்டு விலகி நின்றால் நிம்மதிதானென்று ஒருசமயம் யோசிப்பான். இன்னும் எத்தனையோ தேவைகளை எதிர்கொண்டு நிற்கும் சொந்த மண்ணுக்கு ஏதாவது சாதிக்க வேண்டுமே என்று சிலபோது சிந்திப்பான்.

"எனத்தியன் மகன் செல்லே... அதியள் ஒரே கேட்டுக் கேட்டனுப்பிய"

உம்மாவின் தொல்லையை அவனால் பொறுக்க இயல வில்லை.

"சரிம்மா நான் நாளக்கி கட்டாயம் ரெண்டாலொன்டு செல்லியன்" உறுதிபட அவன் சொல்லிவிட்டான்.

அடுத்தநாள் சுபஹு தொழச் சென்றவன், தொழுது விட்டு எழவில்லை. அப்படியே அமர்ந்து யாஸீன் ஓதினான்.

"யாஅல்லா ஒரு நல்ல முடிவைத் தா" என்று துஆ செய்தான்.

அன்று அலுவலகத்துக்குக் கூடப் போகவில்லை. லீவு போட்டு விட்டான்.

உம்மா மட்டுமல்ல நெருங்கிய உறவினர்கள் பலரும் ஒரு வருக்குத் தெரியாமல் ஒருவராக எத்தனையோ விடயங்களைக் கொண்டு வந்திருந்தார்கள். அதையெல்லாம் ஒரு அலசு அலசினான்.

அவனது நண்பர்கள் கூட தமது குடும்பத்துக்குள்ளால் எத்தனையோ பிரேரணைகளை முன்வைத்திருந்தனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவனாகவே தன்னோடு பழகிய... தெரிந்த சிலரையிட்டு தேடல் நடத்திக் கொண்டுமிருந்தான்.

இன்று அவன் வாக்களித்தபடி உம்மாவுக்கு ஒரு முடிவைச் சொல்லியேயாக வேண்டும்.

ஒவ்வொரு உருவங்களாக மனக்கண்களுக்குள் தோன்றித் தோன்றி மறைந்தன. அவர்களது இயல்புகள்... குணாதிசயங்கள் ஆர்வங்கள் செயற்பாடுகள் இப்படி எல்லாமே போட்டி போட்டுக் கொண்டு போராடின.

"யாஅல்லா ஏன்ட சக்திக்கேத்த மாதிரி யோசின பண்ணி இந்த முடிவுக்கு வந்திட்டன். யாஅல்லா எனக்கு பரக்கத்து செய்வாயாக" என்றபடி இருகைகளையும் நெஞ்சிலும் முகத்திலும் தடவியபடி எழுந்தான்.

உம்மாவை நாடி இம்திஸாமின் கால்கள் நகர்ந்தன.

# 30.

**வி**டிகாலையிலேயே மெல்லிய மழைத்தூறல் பூமியை நனைத்து பதப்படுத்தியது. அதற்கு விட்டுக் கொடுத்துப் பதுங்கி யிருந்த சூரியன் மெல்லத் தலைநீட்டி தன் பொற்கதிர்களால் புற்பூண்டு மரந்தளிர்களுக்கெல்லாம் பளபளப்பூட்டியது.

அன்று புதன்கிழமை பிரதேச செயலகத்துக்குப் போகவேண்டிய நாள்.

சமூர்த்தி நடவடிக்கைகள் தொடர்பான சில வேலைகளைத் தயார்படுத்துவதில் சுபஹு தொழுதுவிட்டு மூழ்கிப்போனாள் மரீனா.

இதற்கிடையில் குடை பிடித்தபடி வாப்பா வெளியே போனதும் அவள் கண்ணில் பதிவாகி விட்டது.

காலைக் கடன்களை முடித்து தயாராகிக் கொண்டுவந்த போது உம்மாவும் வாப்பாவும் முன்னறையில் கதைத்துக் கொண்டிருந் தார்கள்.

"வாப்பா சொபஹோட எங்கியன் போன?" எந்த முன்யோசனையு மின்றி சும்மாதான் கேட்டாள்.

"மாமி வரச்செல்லி அனுப்பீந்த. அதுதான் பெய்த்திட்டு வந்த" முகத்திலே புன்னகைப் பூக்கள்.

"மச்சன் வார மாஸம் வாராம். டெலிபோன் பேசீக்கி" அதைவிட மகிழ்ச்சியோடு உம்மாவின் குரல்.

பேசாமலேயே போயிருக்கலாம் போலிருந்தது அவளுக்கு. இனி இரண்டொரு வார்த்தை கதைக்காமல் போவது நல்லதாகப் படவில்லை.

"ஓ... ரெண்டு வருஷமென்டு செல்லிக்கொண்டுதான் மச்சன் போன. இப்ப மூனு வருஷமாகீட்டேன்" இது மரீனா.

"கலியாணத்த சீக்கிரம் எடுக்கோணுமென்டு மாமீம் மாமாம் செல்லீக்கி. ஊட்டேம் நல்ல பஸிந்தா கெட்டி முடிஞ்சேன்" உம்மா மேலும் கதைக்க வழிதிறந்தாள்.

கலியாணத்தைப் பற்றி அவளால் எப்படிக் கதைக்க முடியும். அது எப்போதோ பெற்றோரால் தீர்மானிக்கப்பட்ட விடயமாயிற்றே.

"ஊரு வேல பாத்துப் பாத்தீந்தது போதும். இனி கலியாணம் முடிச்சி... புள்ளகுட்டி குடும்ப விஷயமெல்லம் பாக்கோணும்" வாப்பாவும் விட்டபாடில்லை.

"நீங்களும் மாமியாங்களும் சேந்து முடிவு செய்ங்கொ" என்று சொல்லிவிட்டு நேரத்தைப் பார்த்தபடி வெளியே பாய்ந்தாள்.

திருமணம் அவளது செயற்பாடுகளுக்கு தடையாக அமையக் கூடாதென்பதில் அவள் கண்ணும் கருத்துமாக இருந்தாள். இது விடயமாக அவள் பல தடவைகள் பசீர் மச்சானோடு கதைத்திருக் கிறாள்.

திருமணத்தின் பின் மச்சானின் துணை அவளது நடவடிக்கை களுக்கு மேலும் பலமாக அமையுமென்பதே அவளது உறுதியான நம்பிக்கை.

போகிற போக்கில் றம்ஸியாவின் வீட்டுக்கேறி இந்த மகிழ்ச்சி யான விடயத்தைப் பகிர்ந்து கொள்வோமா என்று யோசித்தாள். மறுகணம் திருமணத்துக்காக காத்திருப்பவளின் மனதை ஏன் குழப்புவானென்று நேரே நடக்கத் தொடங்கினாள்.

பிரதேச செயலகத்துக்குள் நுழைந்தபோது அவள் எதிர்பார்க் காததொரு தரிசனம். அங்கே இம்திஸாம் நின்றுகொண்டிருந்தான்.

"இது டீஎஸ் ஒபீஸ். பேங்க் அல்ல" அவள் பகிடி விட்டாள்.

"அது தெரீம்... ஒங்கள சந்திக்கத்தான் வந்த?"

"என்னயா புதினமாயீக்கி"

"ஒரு புதினமுமில்ல"

"அப்ப வந்த விஷயத்த செல்லுங்க"

"அப்பிடி லேசாச் செல்லேலா"

"எனக்கென்டா ஒன்டுமே வெளங்கல்ல இம்திஸாம்"

"நீங்க எனக்கொரு ஒதவி செய்யோணும்"

"ஒங்களுக்கு செய்யாத ஒதவியா. செல்லுங்கொ"

"ஏன்ட கலியாண விஷயம்"

"அது இனி பெரிய எடத்து விஷயமேன்"

"நீங்க நெனக்கிய எடத்தில பேசினது மெய். ஊட்டிலேம் அங்கதான் செய்யச் செல்லிய"

"இனி எனத்தியன் பிரச்சின"

"நான் வேறொரு எடத்தில மனம் வெச்சீக்கி"

"செல்லுங்கொ"

"இந்த ஒதவிய ஒங்களாலதான் செய்யேலும்"

“சரி செல்லுங்கொ”

“நான்... நான் றம்ஸியாவ விரும்பியன்”

“அல்ஹம்துலில்லா எவளவு நல்ல விஷயமன்”

“அப்ப சரிதானே”

“எதிர்பார்க்காத சந்தோஷமொன்ட தந்திட்டீங்க. வாங்க கென்டீனுக்கு”

இருவரும் அப்பக்கமாகச் சென்றனர். ஒரு நந்தவனத்தில் நடப்பது போலிருந்தது அவளுக்கு.

இருவரும் எதிரெதிரே அமர்ந்து கொண்டனர்.

இருவரது முகத்திலும் மலர்ச்சியும் சிரிப்பும்.

இருவருக்காகவும் குளிர்பானம் காத்திருந்தது.

மரீனாவுக்கு ஒரு நரம்பு கூடிவிட்டது போன்ற புத்துணர்வு.

புறப்பட்ட பயணத்தை இனி எவராலும் தடுத்து நிறுத்த முடியா தென்பது அவளுக்கு உறுதியாகி விட்டது.



சமூகப் பிரச்சினைகளோடு பின்னிப் பிணைந்த மண்வாசனை கமழும் யதார்த்தமான படைப்புலகத்தை தனதாக்கிக் கொண்டவர் திக்குவல்லை கமால்.

ஒளி பரவுகிறது, நச்சுமரமும் நறுமலர்களும், பாதை தெரியாத பயணம், உதயத் கதிர்கள் ஆகிய நாவல்களோடு ஊருக்கு நாலுபேரும் கைகோர்த்துக் கொள்கிறது.

பொய்மைகள் நிலைப்பதில்லை, இப்படியும் ஒருத்தி, அவள் ஒரு இரத்தினம், முற்றத்து மல்லிகை மணக்கிறது, ஒருபானைச் சோறு முதலான பத்திரிகைத் தொடர்கதைகளையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது.

நாவல் இலக்கியத்துக்காக சாகித்திய விருது உள்ளிட்ட பல்வேறு பரிசுகளை வென்றவர்.

சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கிய நூல்கள் பலவும் வெளியிட்டுள்ளார்.

தளம்பலற்ற தனித்துவப் படைப்பாளியான கமாலிடமிருந்து இன்னும் பல படைப்புக்களை நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

முகம்மது சரீபு றம்ஸீன் (அதிபர்)
மதீனா வித்தியாலயம்
வவுனியா

ISBN - 978 - 955 - 95926 - 9 - 3